# வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

## TNPSC
## நடப்பு நிகழ்வுகள்

(A book for TNPSC Examination)

**ஜூலை 2024**

VETRII I.A.S STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
Since 2011

An ISO 9001: 2015 Institution | Providing Excellence Since 2011


**Head Office**

Old No. 52, New No. 1, 9th Street,
F Block, 1st Avenue Main Road, (Near Istha Siddhi Vinayakar Temple), Anna Nagar East – 600 102.
Phone: 044-2626 5326 | 98844 21666 | 98844 32666

Branches

**SALEM**
No. 189/1, Meyanoor Road,
Near ARRS Multiplex, (Near
Salem New Bus Stand),
Opp. Venkateshwara Complex,
Salem - 636 004.
**Ph: 0427-2330307 | 95001 22022**

**KOVAI**
No. 347, D.S. Complex
(3rd floor), Nehru Street,
Near Gandhipuram Central
Bus Stand, Ramnagar,
Kovai - 641 009.
**Ph: 75021 65390**

**MADURAI**
No. 199, Dharshini Tower,
1st Floor, Vaigai Colony,
Anna Nagar,
Madurai - 625 020.
**Ph: 91500 21999**
**91500 21998**

**TIRUNELVELI**
No. 58, IVY Towers, 3rd Floor,
Palayamkottai,
Near Palai Bus Stand,
(Next to Muthamil Hospital),
Tirunelveli - 627 002.
**Ph: 91500 10079**

**THANJAVUR**
Muthu Complex,
(Pantaloons Showroom Basement)
No. 243, Cauvery Nagar,
Opp. New Housing Unit,
Thanjavur - 613 005.
**Ph: 78711 69099 | 78715 71819**

**KOVILPATTI**
No. 15, Kathiresan Kovil Road,
Behind Kaliamman Temple,
Kovilpatti – 628 501.
**Ph: 90037 90335**
**81222 80685**

**THIRUCHENGODE**
Vivekananda Educational Institutions
Elayampalayam (Po),
Thiruchengode (Tk),
Namakkal (Dt) - 637205.
**Ph: 7845779908**

www. vetriias. com

# முகவுரை



**மு.சண்முகம்**

நிறுவனர்

வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

## இயக்குநர் வாழ்த்து மடல்

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.**

பொருள்:

ஒன்றை பற்றி நினைத்தவர் நினைத்த படியே செயல்புரிவதில் உறுதியடைந்தவராக இருந்தால் நினைத்தவாறு வெற்றியே பெறலாம்.

**என் அன்பிற்கினிய மாணவர்களுக்கு**

மேற்கண்ட வள்ளுவரின் வாய்மொழியினை மெய்பிக்க விடா முயற்சியுடன், கடினமாக உழைத்து நேர்மையான வழியில் மாணவர்கள் தங்கள் வெற்றியினை அடைய **வெற்றி ஆட்சிப்பணிகள் பயிற்சி நிறுவனம்** சரியான வழிகாட்டுதலுடன், தரமான பயிற்சியினை அளித்து ஒவ்வொரு மாணவரின் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி, அவர்களின் குறிக்கோள்களை நிறைவு செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

நம் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு அனைத்து பாடத்திலும் அடிப்படை அறிவை தெளிவுப்படுத்தும் வகையில் நடத்தப்படும் அதனை விளக்கும் வகையில் நம்முடைய அனைத்து கையேடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலினை படித்து பயன்பெற மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துகளை உங்களுக்கு உரித்தாக்கி கொள்கிறேன்.

மு.சண்முகம்
இயக்குனர்
வெற்றி ஐ.ஏ.எஸ் பயிற்சி நிறுவனம்

வெளியீட்டாளர்

வெற்றி சண்முகம் பப்ளிகேஷன்

எஃப்–பிளாக், புதிய எண். 1, 3–வது மாடி, 9–வது தெரு, 1–வது அவன்யூ பிராதான சாலை,

சிந்தாமணி, அண்ணாநகர் (கிழக்கு), சென்னை–600 102.

தொலைபேசி: 044–26265326

© All rights reserved with the publisher. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the written permission of the publisher, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

# பொருளடக்கம்

## 1. வரலாறு


**முக்கிய தினங்கள்** 1

**பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்** 5
- சீபெக்ஸ் 2
- ருத்ரம்–1 ஏவுகணை
- "நோமேடிக் எலிஃபன்ட்–23"
- மைத்ரி ராணுவப்பயிற்சி
- பிட்ச் பிளாக் இராணுவப் பயிற்சி

**உலக உச்சி மாநாடுகள் மற்றும் அமைப்பு** 6
- GPAI அமைச்சரவைக் குழு
- உலகளாவிய இந்தியா AI உச்சிமாநாடு 2024
- உலக பாரம்பரிய இடமாற்ற முன்முயற்சி
- MeDevIS தளம்
- பிம்ஸ்டெக் (BIMSTEC)
- உலக ஒலி, காட்சி, பொழுதுபோக்கு உச்சி மாநாடு, 2024

**விளையாட்டு** 7
- பாரிஸ் ஒலிம்பிக் 2024

**விருதுகள் மற்றும் கௌரவம்** 8
- சிறந்த திருநங்கை விருது

**நியமனங்கள்** 8
- NMC தலைவர்
- 35வது வெளியுறவுத்துறைச் செயலாளர்
- உச்ச நீதிமன்றத்தின் புதிய நீதிபதிகள்
- CSIR தலைவர்


## 2. அரசியல் அறிவியல்


**இந்தியாவின் வெளிநாட்டு உறவுகள்** 10
- இந்தியா – தைவான்
- கொழும்பு பாதுகாப்பு மாநாடு (CSC)
- இந்தியா மற்றும் ரஷ்யா
- இந்தியா – பூடான்

**சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள்** 11
- தந்தி–தந்த்வா மீதான உச்சநீதிமன்ற தீர்ப்பு

**பொது விழிப்புணர்வு மற்றும் பொதுக் கருத்து** 11
- விரைவான விசாரணை
- பண மசோதா


வெற்றி I.A.S. கல்வி மையம்

மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசு திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள் 12

- ஸ்மார்ட் சிட்டி திட்டம்
- சம்பூர்ணதா அபியான்
- ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்
- PARI திட்டம்
- உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை (PLI) திட்டம்
- "ஒரு விஞ்ஞானி, ஒரு தயாரிப்பு" திட்டம்

## 3. புவியியல்

சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் 14

- பதினொரு புதிய உயிர்க்கோளக் காப்பகங்கள்
- புலிகள் இறப்பு
- இந்தியாவில் புலிகள் பாதுகாப்பு

## 4. பொருளாதாரம்

அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் 15

- நிலையான வளர்ச்சி இலக்குகள்– இந்தியா குறியீடு 2023–24
- புதிய உலக மண் சுகாதார குறியீடு
- நிதி உள்ளடக்க குறியீடு 2024
- எண்ணிமப் பொருளாதார அறிக்கை 2024
- உலக மக்கள்தொகை வாய்ப்புகள் 2024
- மாதிரி திறன் கடன் திட்டம்

## 5. அறிவியல்

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் 18

- சண்டிபுரா வைரஸ்

விண்வெளி 18

- செவ்வாய் ஒடிசி சுற்றுக்கலம்
- ககன்யான் திட்டம்

## 6. தினசரி தேசிய நிகழ்வு

19

- புதிய குற்றவியல் சட்டங்கள்
- இந்திய பஸ்டர்ட் மீட்பு திட்டம்
- டிஜிட்டல் பாரத் நிதி
- UNESCO உலக பாரம்பரிய பட்டியல்
- காவிரியில் மாசுபாடு அளவு
- நவி மும்பை விமான நிலையம்
- நிதி ஆயோக்கின் மறுசீரமைப்பு

வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011

- ஆபரேஷன் நன்ஹே ஃபரிஷ்டே
- 6541: 2024 குறியீடு திருத்தம்
- ராஷ்டிரபதி பவனில் உள்ள மண்டபங்களுக்கு சூட்டுதல்
- யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியல்
- GROWTH–இந்தியா தொலைநோக்கி
- வெளியுறவு ஒத்துழைப்புக்கான செயலாளர்
- பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சாக்ஷரதா அபியான் (PMGDISHA)
- மனாஸ் (MANAS) உதவி எண்


## 7. சர்வதேச நிகழ்வு


- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) 24
- ஆசியான் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம்


## 8. தமிழ்நாடு


25
- நான் முதல்வன் திட்டம்
- முருகேசன் குழு
- வயிற்றுப்போக்கை நிறுத்தும் இயக்கம் 2024
- தமிழ்நாடு விண்வெளி தொழில் கொள்கை 2024
- சோதனை வசதிகள்
- சுகாதார உள்கட்டமைப்பு
- மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை ஆய்வு செய்ய குழு
- பருவநிலை மாற்றத்தை ஆய்வு செய்ய குழு
- கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம்
- தமிழ்நாட்டின் மொழி அட்லஸ், 2011
- முதலமைச்சரின் காலை உணவு திட்டம்
- சென்னை உயர்நீதிமன்றத்தின் தற்காலிக தலைமை நீதிபதி
- வாழும் கைவினை பொக்கிஷம் விருது
- 2023–24ம் ஆண்டுக்கான SDG இந்தியா குறியீட்டில் தமிழ்நாட்டின் நிலை
- புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டம் (புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022–27)
- மனநலம் பாதிக்கப்பட்ட வீடற்ற நபர்களுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை
- மக்களுடன் முதல்வர் திட்டம்
- 950 புதிய வகுப்பறைகள் திறப்பு
- பரந்தூர் விமான நிலையம்
- கட்டட அனுமதிக்காக ஒற்றைச் சாளர அமைப்பு உருவாக்கம்

- மாநில அரசின் கோரிக்கைகள்
- TNUHDB, TNHBஆல் கட்டப்பட்ட புதிய வீடுகள் திறப்பு
- தமிழ்ப் புதல்வன் திட்டம்
- ஐக்கிய அரபு அமீரக பொருளாதார அமைச்சர் தமிழ்நாடு வருகை
- பருவநிலை மாற்றத்தை ஆய்வு செய்ய குழு
- தமிழகத்தின் மகப்பேறு இறப்பு விகிதம் குறைந்துள்ளது
- TN–RISE முன்முயற்சி

## மத்திய பட்ஜெட் 2024 33


- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஒன்றிய பட்ஜெட் 2024ஐ தாக்கல் செய்தார்.
- வேளாண்மை
- வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு
- கல்வி
- பெண்கள்

### மனித வள மேம்பாடு மற்றும் சமூக நீதி

- பூர்வோதயா
- அமிர்தசரஸ் கொல்கத்தா தொழில்துறை வழித்தடம்
- MSMEகளுக்கான உற்பத்தி மற்றும் சேவைகள்
- பயிற்சிக்கான திட்டம்:
- நகர்ப்புற வளர்ச்சி
- எரிசக்தி பாதுகாப்பு
- உள்கட்டமைப்பு
- சுற்றுலா
- வரி தொடர்பான திட்டங்கள்

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜூலை 1** | **தேசிய மருத்துவர் தினம்** | ▪ டாக்டர் பிதான் சந்திர ராய் அவர்களின் பிறந்த மற்றும் இறந்த நாளை நினைவுகூரும் வகையில் ஜூலை 1 அன்று இந்தியாவில் ஆண்டுதோறும் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இவர் புகழ்பெற்ற மருத்துவர், சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் முன்னாள் மேற்கு வங்க முதலமைச்சர் ஆவார்.<br>▪ **2024 கருப்பொருள்:** Healing Hands, Caring Hearts. |
| **ஜூலை 1** | **ஜிஎஸ்டி தினம்** | ▪ இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஜூலை 1, 2018 அன்று அறிமுகப்படுத்தப்பட்டதை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1 அன்று இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>ஜிஎஸ்டி பற்றி:<br>▪ அறிமுகம் – ஜூலை 1, 2017<br>▪ அரசியலமைப்பு (101வது திருத்த) சட்டம் 2016இன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது.<br>▪ மூன்று வகையான ஜிஎஸ்டி: CGST (மத்திய), SGST (மாநில) மற்றும் IGST (ஒருங்கிணைந்த)<br>▪ வரி விகிதங்கள் – 0%, 5%, 12%, 18%, 28%<br>▪ ஜிஎஸ்டி கவுன்சில் சரத்து 279Aஇன் கீழ் அமைக்கப்பட்டது. |
| **ஜூலை 6** | **உலக விலங்குவழித் தொற்று தினம்** | ▪ லூயி பாஸ்டர் ரேபீஸ் தடுப்பூசியைக் கண்டுபிடித்ததை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 6 அன்று இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ லூயி பாஸ்டரின் 100வது நினைவு தினத்தை கௌரவிக்கும் வகையில் இந்த நாள் முதன்முதலில் ஜூலை 6, 2007 அன்று அனுசரிக்கப்பட்டது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜூலை 11** | **உலக மக்கள்தொகை தினம்** | ▪ உலகளாவிய மக்கள்தொகை பிரச்சினைகள் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் உரிமைகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் **ஜூலை 11** அன்று இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இந்த நாள் 1989ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் நிறுவப்பட்டது.<br>▪ 2024 கருப்பொருள்: Leave no one behind, count everyone<br>▪ 2024இல் இந்தியாவின் மக்கள்தொகை 1.428 பில்லியனுக்கு சற்று அதிகமாக உள்ளது |
| **ஜூலை 12** | **நபார்டு தினம்** | ▪ தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) நிறுவன தினமான நபார்டு தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 12 அன்று அனுசரிக்கப்படுகிறது.<br>▪ ஜூலை 12, 2024 நபார்டின் 24வது நிறுவன தினமாகும்.<br>▪ நபார்டு என்பது 1981ஆம் ஆண்டின் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிச் சட்டத்தின் கீழ் 1982இல் நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும். |
| **ஜூலை 17** | **தியாகிகள் தினம்** | ▪ தமிழகத்தில் ஜூலை 17 **தியாகிகள்** தினமாக அனுசரிக்கப்படுகிறது.<br>▪ தியாகி **ஆர்யா என்ற பாஷியம்,** தியாகி **சங்கரலிங்கனார்,** தியாகி **செண்பகராமன்** ஆகியோரின் பங்களிப்புகளை கௌரவிப்பதற்காக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது |
| **ஜூலை 17** | **சர்வதேச நீதிக்கான உலக தினம்** | ▪ சர்வதேச நீதியை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 17 அன்று இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இந்த தினம் **ஜூலை 17, 1998 அன்று ரோம் சட்டத்தின் ஆண்டு** நிறைவைக் குறிக்கும் வகையில் அனுசரிக்கபடுகிறது.<br>▪ சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் **ஜூலை 1, 2002 அன்று ரோம் சட்டத்தின் அடிப்படையில்** நிறுவப்பட்டது |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜூலை 18** | **தமிழ்நாடு மாநில உருவாக்க தினம்** | ▪ 2023 முதல் தமிழ்நாடு மாநில உருவாக்க தினமாக ஜூலை 18 அனுசரிக்கப்படுகிறது.<br>▪ ஜூலை 18 அன்றுதான் அப்போதைய முதல்வர் சி.என். அண்ணாதுரை 1967 ஆம் ஆண்டு அப்போதைய மெட்ராஸ் மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் மாற்ற மாநில சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்.<br>குறிப்பு<br>▪ நவம்பர் 1, 1956 அன்று மெட்ராஸ் மாநிலம் ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளா ஆனது |
| **ஜூலை 20** | **உலக சதுரங்க தினம்** | ▪ 1924 இல் பாரிஸில் FIDE என்ற சர்வதேச செஸ் கூட்டமைப்பு உருவானதை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் **ஜூலை 20 அன்று உலக சதுரங்க தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>குறிப்பு<br>▪ இந்த விளையாட்டு பண்டைய இந்தியாவின் சதுரங்கத்திலிருந்து தோன்றியதாக நம்பப்படுகிறது.<br>▪ **அகில இந்திய செஸ் கூட்டமைப்பு** இந்தியாவில் சதுரங்கத்திற்கான நிர்வாக குழுவாகும். |
| **ஜூலை 20** | **சர்வதேச நிலவு தினம் (IMD)** | ▪ நிலவில் மனிதர்கள் முதன்முதலாக இறங்கியதன் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் **ஜூலை 20 அன்று சர்வதேச நிலவு தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் (UNGA) 9 டிசம்பர் 2021 அன்று இந்த தினம் அறிவிக்கப்பட்டது.<br>▪ 1969 ஆம் ஆண்டு **நீல் ஆம்ஸ்ட்ராங் மற்றும் எட்வின் 'பஸ்' ஆல்ட்ரின்** ஆகியோர் நிலவின் மேற்பரப்பில் காலடி எடுத்து வைத்த **அப்பல்லோ 11** திட்டத்தின் மூலம் மனிதர்கள் நிலவில் முதல்முறையாக தடம் பதித்தார்கள் |
| **ஜூலை 22** | **தேசியக் கொடி ஏற்றுக்கொண்ட தினம்** | ▪ 1947ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையால் தேசியக் கொடியை ஏற்றுக்கொண்டதை நினைவுகூரும் வகையில் **ஜூலை 22ஆம்** தேதி இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ தேசியக் கொடி முதன்முதலில் **1923 இல் பிங்கிலி வெங்கையாவால்** வடிவமைக்கப்பட்டது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜூலை 26** | **கார்கில் விஜய் திவாஸின் 25வது ஆண்டு நினைவு தினம்** | ▪ இந்த தினம் ஒவ்வொரு ஆண்டும் **ஜூலை 26** அன்று அனுசரிக்கப்படுகிறது.<br>▪ **1999ம் ஆண்டு கார்கில் போரின் போது** நாட்டிற்காக தங்கள் உயிரை தியாகம் செய்த இந்திய வீரர்களின் தியாகத்திற்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 1999 பிப்ரவரியில் லாகூர் பிரகடனத்தை கையெழுத்திடுவதன் மூலம் காஷ்மீர் பிரச்சினையில் சுமூக தீர்வு ஏற்பட்டது. |
| **ஜூலை 28** | **உலக இயற்கை பாதுகாப்பு தினம்** | ▪ இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் வலியுறுத்த ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 28 அன்று **உலக இயற்கை பாதுகாப்பு தினம்** உலகளவில் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024 கருப்பொருள்: Connecting People and Plants, Exploring Digital Innovation in Wildlife Conservation. |
| **ஜூலை 28** | **உலக ஹெபடைடிஸ் தினம்** | ▪ வைரஸ் ஹெபடைடிஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் **ஜூலை 28** அன்று இந்த **உலக ஹெபடைடிஸ் தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024 கருப்பொருள்: 'One Life, One Liver'.<br>**ஹெபடைடிஸ் பற்றி:**<br>▪ ஹெபடைடிஸ் என்பது கல்லீரல் வீக்கமாகும்.<br>▪ வைரஸ் ஹெபடைடிஸ் மிகவும் பொதுவான வகையாகும், இது A, B, C, D மற்றும் E ஆகிய ஹெபடைடிஸ் வைரஸ்களில் ஒன்றால் ஏற்படுகிறது. |
| **ஜூலை 29** | **சர்வதேச புலிகள் தினம்** | ▪ புலிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் **ஜூலை 29** அன்று இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இந்த நாள் 2010ல் **செயின்ட் பீட்டர்ஸ்பர்க் புலிகள் உச்சி மாநாட்டில்** முதன்முதலில் நிறுவப்பட்டது.<br>▪ 2024 கருப்பொருள்: Best Healthy Days |

வெற்றி I.A.S. கல்வி மையம் Since 2011

# 1.2 பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

## சீபெக்ஸ் 2

- **'சீபெக்ஸ் 2'** என்ற புதிய வெடிபொருளுக்கு இந்திய கடற்படை சான்றிதழ் அளித்துள்ளது.
- இது சோலார் இண்டஸ்ட்ரீஸின் துணை நிறுவனமான எகனாமிக் எக்ஸ்ப்ளோசிவ்ஸ் லிமிடெட் (EEL) ஆல் உருவாக்கப்பட்டது.
- இது **இந்தியாவில் உருவாக்குவோம் திட்டத்தின் கீழ்** உருவாக்கப்பட்டது.
- இது உலகின் மிக சக்திவாய்ந்த அணு அல்லாத வெடிபொருட்களில் ஒன்றாகக் கூறப்படுகிறது.

**இந்தியாவில் உருவாக்குவோம் திட்டம் பற்றி**

- **தொடக்கம்** – செப்டம்பர் 2014
- **குறிக்கோள்** – இந்தியாவை உலகளாவிய வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மையமாக மாற்றுதல்
- **தொடங்கியது** – வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகம்.

## ருத்ரம்–1 ஏவுகணை

- இந்தியா சமீபத்தில் ருத்ரம்–1 ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்தது.
- இது **இந்தியாவின் முதல் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணையாகும்.**
- இது இந்திய விமானப்படைக்கு (IAF) **பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால்** (DRDO) உருவாக்கப்பட்டது.
- இது ஒரு வான்வழி ஏவுகணையாகும்.

## "நோமேடிக் எலிஃபன்ட்–23"

- "**நோமேடிக் எலிஃபன்ட்–23**" கூட்டுப்பயிற்சியின் 16வது பதிப்பு சமீபத்தில் மேகாலயாவில் நிறைவடைந்தது.
- "நோமேடிக் எலிஃபன்ட்–23" என்பது இந்தியா மற்றும் மங்கோலியாவின் படைகளுக்கு இடையிலான கூட்டு ராணுவப் பயிற்சியாகும்.

**மங்கோலியா பற்றி**

- **தலைநகர்** – உளன்பாதர்
- **நாணயம்** – மங்கோலிய துக்ரிக்
- **ஜனாதிபதி** – உக்னாகியின்குரல்சுக்

## மைத்ரி ராணுவப்பயிற்சி

- மைத்ரி ராணுவப்பயிற்சியின் 13வது பதிப்பு சமீபத்தில் தாய்லாந்தின் தாக் மாகாணத்தில் நிறைவடைந்தது.
- இது இந்தியா மற்றும் தாய்லாந்திற்கு இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியாகும்.

**தாய்லாந்து பற்றி**

- **தலைநகரம்** – பாங்காக்
- **மன்னர்** – மகா வஜிரலோங்கோர்ன்
- நாணயம் – தாய் பாட்

## பிட்ச் பிளாக் இராணுவப் பயிற்சி

- இந்திய விமானப்படை (IAF) குழு பிட்ச் பிளாக் 2024 பயிற்சியில் பங்கேற்க **ஆஸ்திரேலியா** சென்றடைந்தது.
- இது ஆஸ்திரேலிய விமானப்படையால் நடத்தப்படும் இருவருட பன்னாட்டு பயிற்சியாகும்.
- இதில் 20 நாடுகள் பங்கேற்கின்றன

**ஆஸ்திரேலியா பற்றி**

- **தலைநகரம்** – கான்பெர்ரா
- **நாணயம்** – ராயல் ஆஸ்திரேலியன் மின்ட்
- **பிரதமர்** – ஆண்டனி அல்பனீஸ் எம்பி

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

# 1.3 உலக உச்சி மாநாடுகள் மற்றும் அமைப்பு

## GPAI அமைச்சரவைக் குழு

- செயற்கை நுண்ணறிவுக்கான உலகளாவிய கூட்டாண்மையின் (GPAI) 6வது அமைச்சரவைக் குழு கூட்டம் சமீபத்தில் **புது டில்லியில்** உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்றது.
- 2024ல் GPAI கூட்டம் இந்தியா தலைமையில் நடைபெற்றது

GPAI பற்றி

- OECD உறுப்பினர்கள் மற்றும் GPAI நாடுகளை ஒன்றிணைக்கும் ஒருங்கிணைந்த கூட்டாண்மை ஆகும்.
- உறுப்பினர்கள் – 29 (இந்தியா உட்பட)

## உலகளாவிய இந்தியா AI உச்சிமாநாடு 2024

- உலகளாவிய இந்தியா AI உச்சிமாநாடு 2024 சமீபத்தில் புது டில்லியில் நடைபெற்றது.
- இந்த உச்சிமாநாடு ஒத்துழைப்பு மற்றும் அறிவுப் பரிமாற்றத்தை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது, AI தொழில்நுட்பங்களின் நெறிமுறை மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான இந்தியாவின் அர்ப்பணிப்பை வலியுறுத்துகிறது.

இந்தியா AI திட்டம் பற்றி

- தொடக்கம் –– மார்ச் 2024
- நோக்கம் – AI புத்தாக்க சூழலமைப்பை வலுப்படுத்துதல்.
- இது டிஜிட்டல் இந்தியா நிறுவனத்தின் (DIC) கீழ் உள்ள 'இந்தியா AI' சுயாதீன வணிகப் பிரிவு (IBD) மூலம் செயல்படுத்தப்படும்.

## உலக பாரம்பரிய இடமாற்ற முன்முயற்சி

- நிலப்பரப்பு கலாச்சார பாரம்பரிய மதிப்பை எடுத்துக்காட்ட ICOMOS உலக பாரம்பரிய இடமாற்ற முன்முயற்சியை தொடங்கியுள்ளது.
- இந்த முன்முயற்சிக்கு அசர்பைஜன் நாடு ஆதரவு அளிக்கிறது மற்றும் நினைவுச்சின்னங்கள் மற்றும் தளங்கள் குழு (ICOMOS) வழிநடத்துகிறது
- இந்த முன்முயற்சி இடமாற்றத்தின் சிக்கலான சுற்றுச்சூழல், கலாச்சார மற்றும் சமூக பரிமாணங்களை எடுத்துக்காட்டவும், சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும், மனித பாரம்பரியத்திற்கு அதன் பங்களிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.

ICOMOS பற்றி

- உருவாக்கம் – 1965
- இது UNESCO உலக பாரம்பரிய குழுவின் ஆலோசனை அமைப்பாக செயல்படுகிறது மற்றும் UNESCO உலக பாரம்பரிய மாநாட்டை செயல்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது .

## MeDevIS தளம்

- உலக சுகாதார நிறுவனம் (WHO) MeDevIS (மருத்துவ சாதனங்கள் தகவல் அமைப்பு) என்ற இணைய தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது மருத்துவ தொழில்நுட்பங்கள் மற்றும் சாதனங்களை அணுகுவதை அதிகரிக்க நோக்கமாக கொண்டுள்ளது.
- இது மருத்துவ சாதனங்கள் குறித்த உலகளாவிய தரவுத்தளமாகும்.

WHO பற்றி

- **உருவாக்கம்** – 7 ஏப்ரல் 1948
- **தலைமையகம்** – ஜெனீவா
- **இயக்குநர் ஜெனரல்** – டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயேசஸ்
- **நோக்கம்** – உலகளாவிய சுகாதார பாதுகாப்பை விரிவுபடுத்துதல்

வெற்றி I.A.S. கல்வி மையம்

## பிம்ஸ்டெக் (BIMSTEC)

- பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சியின் (BIMSTEC) வெளியுறவு அமைச்சர்களின் இரண்டாவது சந்திப்பு சமீபத்தில் புது டெல்லியில் நடைபெற்றது.
- பிம்ஸ்டெக் வெளியுறவு அமைச்சர்களின் முதல் சந்திப்பு 2023ல் தாய்லாந்தில் நடைபெற்றது

**பிம்ஸ்டெக் பற்றி**

- **உருவாக்கம்** – 1997 (பாங்காக் பிரகடனம்).
- **உறுப்பினர்கள்** – 7 (வங்காளதேசம், இந்தியா, இலங்கை, தாய்லாந்து, மியான்மர், நேபாளம், மற்றும் பூடான்)
- **தலைமையகம்** – டாக்கா

## உலக ஒலி, காட்சி, பொழுதுபோக்கு உச்சி மாநாடு, 2024

- கோவாவில் முதல் உலக ஒலி, காட்சி, பொழுதுபோக்கு (வேவ்ஸ்) உச்சி மாநாட்டை (WAVES) **நவம்பர் 2024** இல் இந்தியா நடத்தவுள்ளது.
- இந்த நிகழ்வு **கோவாவில்** நடைபெறும் **இந்திய சர்வதேச திரைப்பட விழாவுடன்** இணைந்து நடத்தப்படும்.
- ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறையில் இந்தியா முத்திரை பதிக்க இந்த நிகழ்வு உதவும்.

**இந்திய சர்வதேச திரைப்பட விழா பற்றி**

- **உருவாக்கம்:** 24 ஜனவரி 1952.
- இந்த மாநாட்டை கோவா அரசு மற்றும் திரைப்பட விழா இயக்குனரகம் இணைந்து நடத்துகிறது

# 1.4 விளையாட்டு

## பாரிஸ் ஒலிம்பிக் 2024

- பாரிஸ் ஒலிம்பிக்கின் திறப்பு விழா 2024 **ஜூலை 26 அன்று பிரான்சின் செய்ன்** நதியில் தொடங்கியது.
- பாரிஸ் ஏற்கனவே **1900 மற்றும் 1924ல்** ஒலிம்பிக் போட்டிகளை நடத்தியுள்ளது.
- பாரிஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவிலிருந்து 117 வீரர்கள் பங்கேற்கிறார்கள்.
- பாரிஸ் 2024ல், **32 விளையாட்டுகளில் 329 பதக்க நிகழ்வுகள்** நடைபெற உள்ளது.
- ஒவ்வொரு ஒலிம்பிக் பதக்கத்திலும் ஐஃபில் கோபுரத்தின் ஒரு அசல் இரும்புத் துண்டு கலந்திருக்கும்.

**இந்திய குழு பற்றி:**

- டோக்கியோ 2020 ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற ஏழு வீரர்களில், நீரஜ் சோப்ரா, மீராபாய் சானு, பி.வி. சிந்து, மற்றும் லவ்லினா போர்கோஹெய்ன் ஆகியோர் பாரிஸ் 2024ல் பங்கேற்பார்கள்.
- PV சிந்து மற்றும் சரத் கமல் இந்தியாவின் சார்பில் கொடி ஏந்திச் செல்கிறார்கள்.
- இந்தியாவின் பாரிஸ் 2024 ஒலிம்பிக் குழுவின் தலைமை அதிகாரியாக ககன் நாரங் உள்ளார்.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

# 1.5 விருதுகள் மற்றும் கௌரவம்

## சிறந்த திருநங்கை விருது

- தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சமீபத்தில் சமூக நல துறையின் 2024ஆம் ஆண்டுக்கான சிறந்த திருநங்கை விருதை கன்னியாகுமரியைச் சேர்ந்த சந்தியா தேவிக்கு வழங்கினார்.
- அவர் கோவிட்–19, வரதட்சணை கொடுமை மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 1,000க்கும் மேற்பட்ட வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.
- விருதாளருக்கு **ரூ.1 லட்சம் காசோலையும், பாராட்டுச் சான்றிதழும்** வழங்கப்பட்டது.

# 1.6 நியமனங்கள்

## NMC தலைவர்

- டாக்டர் பி.என். கங்காதர் சமீபத்தில் தேசிய மருத்துவ ஆணையத்தின் (NMC) தலைவராக நியமிக்கப்பட்டார்.
- இவர் அமைச்சரவை நியமனக் குழுவால் நியமிக்கப்பட்டார்.

அமைச்சரவை நியமனக் குழு (ACC) பற்றி

- உருவாக்கம் – ஜனவரி 26, 1950
- தலைமை – பிரதமர்
- நோக்கம் – மத்திய அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் முக்கிய பதவிகளுக்கு மூத்த அதிகாரிகளை நியமித்தல்.

## 35வது வெளியுறவுத்துறைச் செயலாளர்

- இந்தியாவின் 35வது வெளியுறவுத்துறைச் செயலாளராக **விக்ரம் மிஸ்ரி** சமீபத்தில் நியமிக்கப்பட்டார்.
- அவர் **அமைச்சரவையின் நியமனக் குழுவால்** (ACC) நியமிக்கப்படுகிறார்.
- இந்திய முன்னுரிமை வரிசையில் வெளியுறவு செயலாளர் **23வது இடத்தில்** உள்ளார்.
- அமைச்சரவையின் நியமனக் குழு (ACC) பற்றி
- **உருவாக்கம்** – ஜனவரி 26, 1950
- **தலைமை** – பிரதமர்
- **குறிக்கோள்** – மத்திய அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் முக்கிய பதவிகளுக்கு மூத்த அதிகாரிகளை நியமித்தல்.

## உச்ச நீதிமன்றத்தின் புதிய நீதிபதிகள்

- ஜனாதிபதி திரௌபதி முர்மு சமீபத்தில் நீதிபதிகள் **என்.கோடீஸ்வர் சிங்** மற்றும் நீதிபதி ஆர். மகாதேவன் ஆகியோரை உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக நியமித்தார்.
- அவர்களின் பெயர்கள் இந்திய தலைமை நீதிபதி டி.ஒய் சந்திரசூட் தலைமையிலான ஐந்து பேர் கொண்ட உச்ச நீதிமன்ற கொலீஜியத்தால் பரிந்துரைக்கப்பட்டது.
- **நீதிபதி என். கோடீஸ்வர் சிங் மணிப்பூரைச் சேர்ந்த முதல் நீதிபதியாக உச்ச நீதிமன்றத்திற்கு** நியமிக்கப்பட்டுள்ளார்.

குறிப்பு

- உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அரசியலமைப்பின் 124(3) பிரிவின் கீழ் நியமிக்கப்படுகிறார்கள்.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- உச்ச நீதிமன்றத்தின் மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை : 34 (33 நீதிபதிகள் + 1 தலைமை நீதிபதி)

## CSIR தலைவர்

- தற்போது அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலின் (CSIR) இயக்குநர் ஜெனரலாக இருக்கும் **நல்லதம்பி கலைச்செல்விக்கு** இரண்டு ஆண்டுகள் பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- இவர் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலின் (CSIR) முதல் பெண் இயக்குநர் ஜெனரல் ஆவார்.

CSIR பற்றி

- **உருவாக்கம்** – செப்டம்பர் 26, 1942
- **தலைவர்** – இந்தியப் பிரதமர்
- **இயக்குநர் ஜெனரல்** – என்.கலைசெல்வி
- **தலைமையகம்** – புது தில்லி

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 இந்தியாவின் வெளிநாட்டு உறவுகள்

### இந்தியா – தைவான்

- சமீபத்தில், இந்தியா மற்றும் தைவான் இடையே இயற்கை உற்பத்திப் பொருட்களுக்கான பரஸ்பர அங்கீகார ஒப்பந்தம் (MRA) கையெழுத்தானது.
- இது இயற்கை உற்பத்திப் பொருட்களுக்கான முதல் இருதரப்பு ஒப்பந்தமாகும்.
- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) இந்த திட்டத்தை செயல்படுத்தும் நிறுவனமாகும்.
- தேசிய இயற்கை உற்பத்தி திட்டத்தின் (NPOP) கீழ் சான்றளிக்கப்பட்ட பொருட்கள் தைவானில் விற்பனைக்கு அனுமதிக்கப்படுகின்றன.

**தைவான் பற்றி**

- **தலைநகரம்** – தாய்பே நகரம்
- **நாணயம்** – புதிய தைவான் டாலர்
- **பிரதமர்** – சோ ஜுங்–தாய்
- **அதிபர்** – லாய் சிங் தே

### கொழும்பு பாதுகாப்பு மாநாடு (CSC)

- வங்கதேசம் சமீபத்தில் கொழும்பு பாதுகாப்பு மாநாட்டில் (CSC) ஐந்தாவது உறுப்பினராக இணைந்தது.

**கொழும்பு பாதுகாப்பு மாநாடு CSC பற்றி**

- **உருவாக்கம்** – 2011
- இந்தியா, இலங்கை மற்றும் மாலத்தீவுகளின் முத்தரப்பு கடல்சார் பாதுகாப்பு குழுவாக நிறுவப்பட்டது.
- மொரீஷியஸ் நான்காவது உறுப்பினராக இணைந்தது.

### இந்தியா மற்றும் ரஷ்யா

- ரஷ்யாவைச் சேர்ந்த ஸ்பெர் வங்கியின் கூற்றுப்படி, **இந்தியாவும் ரஷ்யாவும்** தங்கள் தேசிய நாணயங்களில் (ரூபாய்–ரூபிள்) தங்கள் **கொடுப்பனவுகளை இரட்டிப்பாக்கியுள்ளன.**
- மேற்கத்திய நாடுகளின் தடைகள் இருந்த போதிலும் 2024ல் இந்திய கார்ப்பரேட் நிறுவனங்களின் ரூபாய் வைப்புத்தொகை பல மடங்கு அதிகரித்துள்ளது.
- **இந்தியாவும் ரஷ்யாவும் 2030க்குள் 100 பில்லியன் டாலர்** வர்த்தக இலக்கை நிர்ணயித்துள்ளன.
- 2023–24ல் இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் சுமார் $65 பில்லியன் ஆகும்.

**ரஷ்யா பற்றி**

- **தலைநகரம்** – மாஸ்கோ
- **நாணயம்** – ரஷ்ய ரூபிள்
- **பிரதமர்** – மிகைல் மிஷுஸ்டின்
- **ஜனாதிபதி** – விளாடிமிர் புடின்

### இந்தியா – பூடான்

- அடுத்த 18 மாதங்களில் பொருளாதார ஊக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக **பூடானுக்கு ரூ.1,500 கோடி** வழங்க இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- இந்தியா மற்றும் பூடான் வெளியுறவு செயலாளர்கள் இணைந்து நடத்திய 3வது இந்தியா–பூடான் வளர்ச்சி ஒத்துழைப்பு பேச்சுவார்த்தையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- இது பொதுவாக 13வது ஐந்தாண்டுத் திட்டத்தின் 'திட்டமிடல் பேச்சுவார்த்தை' என்று அழைக்கப்படுகிறது, இது வளர்ச்சி ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நலன்களில் கவனம் செலுத்துகிறது.

**பூட்டான் பற்றி**

- தலைநகரம் – திம்பு
- மன்னர் – ஜிக்மே கேசர் நாம்கேல் வாங்சுக்
- நாணயங்கள் – பூட்டான் நகல்ட்ரம், இந்திய ரூபாய்

# 2.2 சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள்

## தந்தி–தந்த்வா மீதான உச்சநீதிமன்ற தீர்ப்பு

- தந்தி–தந்த்வா சமூகத்தை பட்டியலிடப்பட்ட சாதியாக வகைப்படுத்தும் 2015ம் ஆண்டு பீகார் அரசின் அறிவிப்பை உச்சநீதிமன்றம் சமீபத்தில் ரத்து செய்தது.
- **அரசியலமைப்பின் 341 வது பிரிவின் கீழ்** வெளியிடப்பட்ட அட்டவணை சாதி பட்டியலில் மாநிலங்கள் மாற்றங்களைச் செய்ய முடியாது என்று தீர்ப்பளித்தது.
- நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்தின் மூலம் மட்டுமே பட்டியல் சாதியினர் பட்டியலை திருத்தவோ அல்லது மாற்றவோ முடியும்.
- நாடாளுமன்றம் இயற்றும் சட்டம் இல்லாமல் மத்திய அரசோ, ஜனாதிபதியோ மாற்றங்களைச் செய்ய முடியாது.

குறிப்பு

- **இந்திய அரசியலமைப்பின் பிரிவு 341**, ஒரு மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தில் குறிப்பிட்ட சாதிகள் மற்றும் வகுப்புகளை அட்டவணை சாதிகளாக அறிவிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கிறது

# 2.3 பொது விழிப்புணர்வு மற்றும் பொதுக் கருத்து

## விரைவான விசாரணை

- குற்றத்தின் தீவிரத்தைப் பொருட்படுத்தாமல் அனைத்து வழக்குகளுக்கும் சட்டப்பிரிவு 21ல் உறுதிப்படுத்தப்பட்டுள்ள விரைவான விசாரணைக்கான அரசியலமைப்பு உரிமை பொருந்தும் என உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

குறிப்பு

- கர்தார் சிங் எதிர் பஞ்சாப் மாநிலம் (1994) வழக்கில் விரைவான விசாரணைக்கான உரிமையை அடிப்படை உரிமையாக உச்சநீதிமன்றம் அறிவித்தது

**பண மசோதா**

- சட்டங்களை பண மசோதாக்களாக மத்திய அரசு நிறைவேற்றுவதை எதிர்த்து தொடரப்பட்ட மனுக்களை விசாரிக்க **அரசியல் சாசன அமர்வு** அமைக்கப்படும் என்று இந்திய தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தெரிவித்தார்.
- **பாராளுமன்றத்தில் பண மசோதாக்களாக நிறைவேற்றப்பட்ட சில சட்டங்கள்:**

வெற்றி I.A.S. கல்வி மையம்

- பணமோசடி தடுப்புச் சட்டத்தில் திருத்தங்கள்
- நிதிச் சட்டம் 2017
- ஆதார் சட்டம், 2016

- **ரோஜர் மேத்யூ எதிர் சவுத் இந்தியன் பேங்க் லிமிடெட் வழக்கில்** தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு நவம்பர் 2019 இல் பண மசோதா குறித்த வழக்கை **ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு** பரிந்துரைத்தது.

**குறிப்பு**

- **பண மசோதா சட்டப்பிரிவு 110(1) இன் உட்பிரிவுகள்** (a) முதல் (g) வரை உள்ள அனைத்து அல்லது எந்த விஷயத்தையும் கையாளும் விதிகளை மட்டுமே கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது.
- **சட்டப்பிரிவு 110 பண மசோதாவைக் குறிக்கிறது** மேலும் இது மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்தப்படும்.

# 2.4 மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசு திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

## ஸ்மார்ட் சிட்டி திட்டம்

- சமீபத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டம் மார்ச் 2025 வரை நீட்டிக்கப்பட்டது.

**ஸ்மார்ட் சிட்டி திட்டம் பற்றி**

- தொடங்கப்பட்டது – 25 ஜூன், 2015
- குறிக்கோள் – முக்கிய உள்கட்டமைப்பு, சுத்தமான மற்றும் நிலையான சூழலை வழங்கும் நகரங்களை மேம்படுத்துதல்.

## சம்பூர்ணதா அபியான்

- நிதி ஆயோக் சமீபத்தில் சம்பூர்ணதா அபியான் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- இது 3 மாத கால பிரச்சாரமாகும், இது ஆர்வமுள்ள மாவட்டங்கள் மற்றும் தொகுதிகளில் 6 முக்கிய குறிகாட்டிகளை 100% அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாவட்டங்களும் தொகுதிகளும் முறையே ஆர்வமுள்ள மாவட்டங்கள் திட்டம் மற்றும் ஆர்வமுள்ள தொகுதிகள் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**ஆர்வமுள்ள மாவட்டங்கள் திட்டம் பற்றி**

- தொடக்கம் –– 2018 (நிதி ஆயோக்)
- நோக்கம் –– இந்தியா முழுவதும் 112 மாவட்டங்களை மாற்றியமைத்தல்.

**ஆர்வமுள்ள தொகுதிகள் திட்டம் பற்றி**

- தொடக்கம் – 2023
- நோக்கம்– இந்தியா முழுவதும் 500 தொகுதிகளில் (329 மாவட்டங்கள்) அத்தியாவசிய அரசு சேவைகளை வழங்குதல்.

## ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

- தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) கேரளாவின் குளத்துப்புழா கிராம பஞ்சாயத்தில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தை (ITDP) தொடங்க திட்டமிட்டுள்ளது.

ITDP பற்றி

- இது 2005–06 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் NABARD–ன் முதன்மைத் திட்டமாகும்.

- நோக்கம் – நிலையான வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளுதல்.

NABARD பற்றி

- உருவாக்கம் – 1982
- NABARD சட்டம் 1981–ன் கீழ் நிறுவப்பட்டது.
- தலைமையகம் – மும்பை
- தலைவர் – ஷாஜி கே.வி.

## PARI திட்டம்

- கலாச்சார அமைச்சகம் சமீபத்தில் 46வது உலக பாரம்பரிய குழு கூட்டத்திற்காக PARI (இந்தியாவின் பொதுக் கலை ) என்ற திட்டத்தைத் தொடங்கியது.

PARI திட்டம் பற்றி

- தொடங்கியது – கலாச்சார அமைச்சகம்.
- செயல்படுத்தும் அமைப்பு – லலித் கலா அகாடமி மற்றும் தேசிய நவீன கலை காட்சியகம்
- நோக்கம் – ஆயிரக்கணக்கான ஆண்டுகால கலை பாரம்பரியத்திலிருந்து உத்வேகம் பெற்று, நவீன கருத்துக்கள் மற்றும் நுட்பங்களை உள்ளடக்கிய பொதுக் கலையை உருவாக்குதல். (edited)

## உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை (PLI) திட்டம்

- வெள்ளைப் பொருட்களுக்கான (ஏசி மற்றும் எல்இடி விளக்குகள்) PLI திட்டத்திற்கு விண்ணப்பங்களை அரசு அழைத்துள்ளது.
- வெள்ளைப் பொருட்கள் என்பவை குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள் மற்றும் ஏசிகள் போன்ற பெரிய மின்சாதனங்கள் மற்றும் வீட்டு உபகரணங்களாகும்.

PLI திட்டம் பற்றி

- தொடக்கம் – 2020
- முதன்மை அமைச்சகம் – வர்த்தகம் & தொழில்துறை அமைச்சகம்
- இது ஒரு மத்திய அரசின் திட்டமாகும்

## "ஒரு விஞ்ஞானி, ஒரு தயாரிப்பு" திட்டம்

- இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR) சமீபத்தில் அதன் 96வது நிறுவன தினத்தில் (ஜூலை 16) '**ஒரு விஞ்ஞானி ஒரு தயாரிப்பு**' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- ஒரு விஞ்ஞானி ஒரு தயாரிப்பு – விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு துறையில் ஆராய்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், தீவனப் பயிர்கள் மற்றும் கரும்பு உள்ளிட்ட 56 பயிர்களின் 323 வகைகளை வெளியிடுவதாகவும் ICAR அறிவித்தது.
- ICAR 100 நாட்கள் 100 **வகைகள் மற்றும் 100 நாட்கள் 100 தொழில்நுட்பங்கள்** – ஆகிய திட்டங்களின் மூலம் 100 நாள் காலத்திற்குள் 100 புதிய விதை வகைகள் மற்றும் சம எண்ணிக்கையிலான பண்ணை தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ICAR பற்றி

- **உருவாக்கம்** – ஜூலை 16, 1929
- **தலைமையகம்** – புது தில்லி
- **இயக்குனர்** – ஹிமான்ஷு பதக்.

வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011

# 3.புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல்

### பதினொரு புதிய உயிர்க்கோளக் காப்பகங்கள்

- சமீபத்தில் ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (UNESCO) கொலம்பியா போன்ற நாடுகளிலிருந்து 11 புதிய உயிர்க்கோளக் காப்பகங்களை உலக உயிர்க்கோளக் காப்பக வலையமைப்பில் (WNBR) சேர்த்துள்ளது
- WNRB தற்போது 136 நாடுகளில் 759 தளங்களைக் கொண்டுள்ளது
- WNRB மனிதன் மற்றும் உயிர்க்கோளம் (MAB) திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.

MAB திட்டம் பற்றி

- **தொடக்கம்** – 1971 அரசுகளுக்கிடையேயான அறிவியல் திட்டமாக தொடங்கப்பட்டது.
- **நோக்கம்** – மக்களுக்கும் அவர்களின் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான உறவை மேம்படுத்துவதற்கான அறிவியல் அடிப்படையை நிறுவுதல்

குறிப்பு

- இந்தியாவில் உள்ள 18 உயிர்க்கோளக் காப்பகங்களில், 12 உலக உயிர்க்கோளக் காப்பக வலையமைப்பின் (WNBR) கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளன
- நீலகிரி உயிர்க்கோளக் காப்பகம் முதன்முதலில் அங்கீகரிக்கப்பட்டது.

### புலிகள் இறப்பு

- தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் (NTCA) கூற்றுப்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில் இயற்கை காரணங்களால் மற்றும் வேட்டையாடுதல் உள்ளிட்ட பிற காரணங்களால் இந்தியாவில் மொத்தம் 628 புலிகள் இறந்துள்ளன.
- 2019ல் 96 புலிகள், 2020ல் 106, 2021ல் 127, 2022ல் 121, மற்றும் 2023ல் 178 புலிகள் இறந்தன.
- 2012–2022 காலகட்டத்தில், மத்தியப் பிரதேசம் (பந்தவ்கர் புலிகள் காப்பகம்) அதிக எண்ணிக்கையிலான புலிகள் இறப்பைப் பதிவு செய்துள்ளது.

இந்தியாவில் புலிகள் பாதுகாப்பு

- **புலித் திட்டம்** – 1973
- M–STrIPES – சிறப்பான ரோந்து மற்றும் தரவு சேகரிப்புக்கான டிஜிட்டல் கண்காணிப்பு அமைப்பாகும்.
- **தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம்** (NTCA) – புலித் திட்டம் மற்றும் இந்தியாவின் பல புலிகள் காப்பகங்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துதல்.

வெற்றி I.A.S. கல்வி மையம்



# 4. பொருளாதாரம்

## 4.1 அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### நிலையான வளர்ச்சி இலக்குகள்– இந்தியா குறியீடு 2023–24

- SDG (நிலையான வளர்ச்சி இலக்கு) இந்தியா குறியீடு 2023–24 சமீபத்தில் நிதி ஆயோக்கால் வெளியிடப்பட்டது.
- இது 113 குறிகாட்டிகளில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் (UTs) தேசிய முன்னேற்றத்தை அளவிடுகிறது மற்றும் கண்காணிக்கிறது.
- மதிப்பெண்கள் 0–100 வரை இருக்கும்.
- மாநிலங்கள் குறியீட்டின் கீழ் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன: சாதனையாளர் மாநிலம் (100), முன்னணி மாநிலம் (65–99), செயல்திறன்மிக்க மாநிலம் (50–64), மற்றும் ஆர்வமிக்க மாநிலம் (0–49).

**முக்கிய கண்டுபிடிப்புகள்**

- இந்தியாவிற்கான கூட்டு மதிப்பெண் 2018 இல் 57 ஆக இருந்து 2020–21 இல் 66 ஆக உயர்ந்து 2023–24 இல் 71 ஆக இருந்தது.
- அனைத்து மாநிலங்களும் ஒட்டுமொத்த மதிப்பெண்ணில் முன்னேற்றம் கண்டுள்ளன.
- இலக்குகள் 1 (வறுமை இல்லை), 8 (கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி), 13 (காலநிலை நடவடிக்கை) மற்றும் 15 (நிலத்தில் வாழ்க்கை) ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.
- இலக்கு 13 (காலநிலை நடவடிக்கை) 2020–21 இல் 54 ஆக இருந்து 2023–24 இல் 67 ஆக உயர்ந்த மதிப்பெண்களை பதிவு செய்துள்ளது, அதைத் தொடர்ந்து இலக்கு 1 (வறுமை இல்லை) 60 இலிருந்து 72 ஆக உள்ளது.
- முதன்மை மாநிலங்கள்: உத்தரகண்ட் மற்றும் கேரளா தலா 79 மதிப்பெண்களுடன் முதலிடத்தில் உள்ளன.
- முதன்மை யூனியன் பிரதேசம்: சண்டிகர்.

**குறிப்பு**

- SDG இந்தியா குறியீட்டின் முதல் பதிப்பு 2018 இல் வெளியிடப்பட்டது.

### புதிய உலக மண் சுகாதார குறியீடு

- சமீபத்தில் மொராக்கோவில் நடைபெற்ற மண் தொடர்பான சர்வதேச மாநாட்டில் யுனெஸ்கோவால் புதிய உலக மண் சுகாதாரக் குறியீடு அறிவிக்கப்பட்டது.
- பல்வேறு பகுதிகள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளில் மண்ணின் தரத்தை பகுப்பாய்வு செய்வதற்கும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் மேலும் சீரழிவு அல்லது முன்னேற்றத்தின் போக்குகளைக் கண்டறியும் அளவை இந்த குறியீடு தரப்படுத்துகிறது.
- யுனெஸ்கோ தனது உயிர்க்கோளக் காப்பகத் திட்டத்தின் கீழ் பத்து இயற்கைத் தளங்களில் மண் மற்றும் நிலப்பரப்புகளின் நிலையான

வெற்றி I.A.S. கல்வி மையம்

மேலாண்மைக்கான முன்னோடித் திட்டத்தைத் தொடங்குவதாகவும் அறிவித்தது.

**யுனெஸ்கோ பற்றி**

- **தலைமையகம்** – பாரிஸ், பிரான்ஸ்
- **உருவாக்கம்** – 16 நவம்பர் 1945
- **இயக்குநர் ஜெனரல்** – ஆட்ரி அசோலே (பிரான்ஸ்)

## நிதி உள்ளடக்க குறியீடு 2024

- இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் மார்ச் 2024க்கான நிதி உள்ளடக்க குறியீட்டை வெளியிட்டது.
- மார்ச் 2024க்கான குறியீட்டின் மதிப்பு 64.2 ஆக உள்ளது.
- இது இந்தியா முழுவதும் நிதி உள்ளடக்கத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது

**நிதி உள்ளடக்க குறியீடு பற்றி:**

- FI–குறியீடு என்பது நிதி உள்ளடக்கத்தின் விரிவான அளவீடு ஆகும், இது 0 முதல் 100 வரை கணக்கிடபடுகிறது .
- இது மூன்று முக்கிய அளவுருக்களைக் கொண்டுள்ளது
    - அணுகல் (35%)
    - பயன்பாடு (45%)
    - தரம் (20%)
- இது ஆண்டுதோறும் ஜூலை மாதத்தில் வெளியிடப்படுகிறது.

## எண்ணிமப் பொருளாதார அறிக்கை 2024

- எண்ணிமப் பொருளாதார அறிக்கை 2024 சமீபத்தில் ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பால் (UNCTAD) வெளியிடப்பட்டது.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் உள்ளடக்கிய எண்ணிம எதிர்காலத்திற்கான நிலையான உத்திகளின் அவசர தேவையை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.முக்கிய கண்டுபிடிப்புகள்
- இணைய பயனர்களின் எண்ணிக்கை 2005இல் 1 பில்லியனில் இருந்து 2023இல் 5.4 பில்லியனாக அதிகரித்துள்ளது.
- தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத் (ICT) துறை 2020இல் உலகளாவிய பசுமை இல்ல வாயு உமிழ்வில் 1.5–3.2% பங்களித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இணையவழி வாடிக்கையாளர்கள் அதிகரிதத்தின் காரணமாக 2010 முதல் 2022 வரை எண்ணிம தொடர்பான கழிவுகள் 30% அதிகரித்து உலகளவில் 10.5 மில்லியன் டன்களை எட்டியுள்ளது.
- டிஜிட்டல் மயமாக்கலுக்குத் தேவையான கிராஃபைட், லித்தியம் மற்றும் கோபால்ட் போன்ற கனிமங்களுக்கான தேவை 2050 ஆண்டில் 500% அதிகரிக்கலாம்.

UNCTAD பற்றி

- **உருவாக்கம்** – டிசம்பர் 30, 1964
- **தலைமையகம்** – ஜெனீவா
- **பொதுச் செயலாளர்** – ரெபேகா கிரின்ஸ்பான்

## உலக மக்கள்தொகை வாய்ப்புகள் 2024

- சமீபத்தில், ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை (UN–DESA) உலக மக்கள்தொகை வாய்ப்புகள் அறிக்கையை வெளியிட்டது.
- இது உலகெங்கிலும் உள்ள நாடுகளின் மக்கள்தொகை போக்குகளை பற்றி விவரிக்கிறது

**முக்கிய கண்டுபிடிப்புகள்**

- **உலக மக்கள்தொகை உச்சம்:** 2024இல் 8.2 பில்லியனாக இருந்த உலக மக்கள்தொகை 2080களின் மத்தியில் சுமார் 10.3 பில்லியனாக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம் Since 2011

- **கருவுறுதல் விகிதம்**: தற்போது, கருவுறுதல் விகிதம் ஒரு பெண்ணுக்கு 2.25 ஆக உள்ளது, இது 1990இல் 3.31 ஆக இருந்தது.
- **ஆயுட்காலம்**: 2024இல் பிறப்பின் போதான ஆயுட்காலம் 73.3 ஆண்டுகளை எட்டியது, இது 1995 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8.4 ஆண்டுகள் அதிகரித்துள்ளது .
- **இளம் வயது கர்ப்பங்கள்**: 2024இல், 4.7 மில்லியன் குழந்தைகள், அல்லது உலகளவில் மொத்தத்தில் சுமார் 3.5 சதவீதம், 18 வயதுக்கு குறைவான தாய்மார்களுக்குப் பிறந்தன.
- இந்தியாவின் மக்கள்தொகை 2060களின் முற்பகுதியில் உச்சத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது மற்றும் இந் நூற்றாண்டு முழுவதும் உலகின் மிகப்பெரிய மக்கள்தொகை கொண்ட நாடாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

UN–DESA பற்றி

- உருவாக்கம் – 1948
- தலைமையகம் – நியூயார்க்
- தலைவர் – லியு ஜென்மின்

## மாதிரி திறன் கடன் திட்டம்

- திறன் மேம்பாட்டு அமைச்சர் ஜெயந்த் சௌத்ரி சமீபத்தில் **புதுப்பிக்கப்பட்ட மாதிரி திறன் கடன்** திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.
- இத்திட்டம் முதலில் **2015ல்** தொடங்கப்பட்டது.
- முன்னர், இந்திய வங்கிகள் சங்கத்தின் உறுப்பினர்களான தனியார், பொதுத்துறை மற்றும் வெளிநாட்டு வங்கிகள் மட்டுமே கடன் வழங்குவதற்கு தகுதியுடையவை ஆகும்.
- புதுப்பிக்கப்பட்ட திட்டத்தின் கீழ், வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFCs), NBFC–MFIs (நுண்நிதி நிறுவனங்கள்) மற்றும் சிறு நிதி வங்கிகளும் கடன் வழங்கும் நிறுவனங்களாக இருக்கலாம்.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S. STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

# 5. அறிவியல்




## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்

### சண்டிபுரா வைரஸ்

- சமீபகாலமாக **அக்யூட் என்செபாலிடிஸ் சிண்ட்ரோம்** (AES) பாதிப்புகள் அதிகரித்துள்ளன.
- இது **சண்டிபுரா வைரஸால்** ஏற்படுகிறது.
- மத்திய சுகாதார அமைச்சகம் வழங்கிய தரவுகளின்படி, இதுவரை, குஜராத்தில் இருந்து 75 AES பாதிப்புகள் பதிவாகியுள்ளன, ராஜஸ்தானில் இருந்து இரண்டு மற்றும் மத்தியப் பிரதேசத்தில் இருந்து ஒரு பாதிப்பு பதிவாகியுள்ளன.

**சண்டிபுரா வைரஸ் பற்றி**

- இது மூளையில் வீக்கத்தை ஏற்படுத்துகிறது.
- இந்த வைரஸ் **சண்டிபுரா வெசிகுலோவைரஸ்** (CHPV) என்றும் அழைக்கப்படுகிறது, இது **ராப்டோவிரிடே குடும்பத்தைச் சேர்ந்தது.**
- இது முதன்முதலில் 1965 ஆம் ஆண்டு மகாராஷ்டிராவில் உள்ள சண்டிபுரா என்ற கிராமத்தில் கண்டறியப்பட்டது.
- **பரவுதல்:** மணல் ஈக்கள் மற்றும் ஏடிஸ் எஜிப்டி போன்ற கொசு இனங்கள் மூலம் பரவுகிறது.
- **அறிகுறிகள்:** காய்ச்சல், வாந்தி, தளர்வான இயக்கம் மற்றும் தலைவலி

VETRII IAS STUDY CIRCLE Since 2011

## 5.2 விண்வெளி

### செவ்வாய் ஒடிசி சுற்றுக்கலம்

- சமீபத்தில், நாசாவின் செவ்வாய் ஒடிசி சுற்றுக்கலம் ஒலிம்பஸ் மோன்ஸின் காட்சியைப் படம் பிடித்தது.
- இது நமது சூரிய குடும்பத்தின் மிகப்பெரிய எரிமலை ஆகும்.
- இது செவ்வாய் கிரகத்தில் அமைந்துள்ளது.

**செவ்வாய் ஒடிசி பற்றி**

- விண்ணில் செலுத்தப்பட்டது – 2001
- இது தொடர்ந்து செயல்படும் மிக நீண்ட சுற்றுப்பாதை திட்டமாகும்.

### ககன்யான் திட்டம்

- ககன்யான் திட்டத்திற்காக பயிற்சி பெறும் நான்கு விண்வெளி வீரர்களில் ஒருவர் **நாசாவுடனான கூட்டு முயற்சியின்** ஒரு பகுதியாக சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் செல்வார் என்று மத்திய அரசு பாராளுமன்றத்தில் தெரிவித்தது.

**ககன்யான் திட்டம் பற்றி:**

- தொடக்கம் – 2025
- நோக்கம் – **புவியின் தாழ் சுற்றுப்பாதைக்கு (LEO) மனித விண்வெளி பயணத்தை மேற்கொள்ளுதல்.**
- இது விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் 4வது நாடாக (அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவுக்குப் பிறகு) இந்தியாவை மாற்றும்.

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 6 தினசரி தேசிய நிகழ்வு



## புதிய குற்றவியல் சட்டங்கள்

- மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள் ஜூலை 1, 2024 முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.
- இந்திய தண்டனைச் சட்டம் (IPC), 1860, குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CrPC) 1973, மற்றும் இந்திய சாட்சியச் சட்டம், 1872 ஆகியவற்றை முறையே பாரதிய நியாய சன்ஹிதா (BNS), பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS) மற்றும் பாரதிய சாக்ஷ்ய அதினியம் (BSA) போன்ற சட்டங்கள் மாற்றும்.

**புதிய சட்டங்களில் முக்கிய அம்சங்கள்:**

- சிறு குற்றங்களுக்கான தண்டனையாக சமூக சேவையை அறிமுகப்படுத்துகிறது.
- **பயங்கரவாதச் சட்டம்:** பயங்கரவாதம் என்பது இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை, பாதுகாப்பு அல்லது பொருளாதாரப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் அல்லது மக்கள் மத்தியில் பயங்கரவாதத்தை ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட அல்லது சாத்தியமான செயல்கள் என வரையறுக்கப்படுகிறது.
- **கும்பல் கொலை:** இனம், ஜாதி, சமூகம், பாலினம், பிறந்த இடம், மொழி, தனிப்பட்ட நம்பிக்கை போன்ற காரணங்களுக்காக ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து கும்பல் கொலை செய்திருந்தால், மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்படும்.
- குற்றம் சாட்டப்பட்ட ஒருவரின் விசாரணையை அவர் அல்லது அவள் இல்லாத நிலையில் இந்த சட்டம் அனுமதிக்கிறது.
- சுருக்க விசாரணைகள் இப்போது 3 ஆண்டுகள் வரை தண்டனை விதிக்கப்படும் வழக்குகளை உள்ளடக்கியுள்ளது, இது அமர்வு நீதிமன்றங்களில் 40% க்கும் அதிகமான வழக்குகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேடுதல் மற்றும் கைப்பற்றலின் போது வீடியோ பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது அப்படி பதிவு செய்யாமல் எந்த குற்றப்பத்திரிகையும் செல்லாது.
- சிறைத்தண்டனையின் மூன்றில் ஒரு பகுதியை அனுபவித்த முதல் முறை குற்றவாளி நீதிமன்றத்தால் ஜாமீனில் விடுவிக்கப்படுவார்.
- ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் ஒவ்வொரு வழக்கிலும் தடயவியல் நிபுணர்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

## இந்திய பஸ்டர்ட் மீட்பு திட்டம்

- பெரிய இந்திய பஸ்டர்ட் (GIB) மற்றும் லெஸ்ஸர் புளோரிகன் ஆகியவற்றின் அடுத்த கட்டப் பாதுகாப்பிற்காக சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC) ரூ.56 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஆபத்தான நிலையில் உள்ள GIB மற்றும் லெஸ்ஸர் புளோரிகன் ஆகியவற்றின் நீண்டகால மீட்புக்காக 2016 ஆம் ஆண்டு முதல் பாதுகாப்புத் திட்டம் செயல்பட்டு வருகிறது.
- தற்போதைய நிலவரப்படி, சுமார் 140 GIBகள் மற்றும் 1,000 க்கும் குறைவான ஃப்ளோரிகன்கள் காடுகளில் வாழ்கின்றன.

வெற்றி I.A.S. கல்வி மையம்

**கிரேட் இந்தியன் பஸ்டர்ட் பற்றி**

- வனவிலங்கு பாதுகாப்பு சட்டம், 1972இன் அட்டவணை I மற்றும் IVன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது.
- IUCN – ஆபத்தான நிலையில் உள்ளது

**லெஸ்ஸர் புளோரிகன் பற்றி**

- வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின் (1972) அட்டவணை I, IUCN – ஆபத்தான நிலையில் உள்ளது

## டிஜிட்டல் பாரத் நிதி

- தொலைத்தொடர்புத் துறை (DoT) சமீபத்தில் தொலைத்தொடர்புச் சட்டம், 2023–ன் பிரிவுகள் 26 மற்றும் 56–ன் கீழ் தொலைத்தொடர்பு (டிஜிட்டல் பாரத் நிதி) விதிகள், 2024 வரைவை அறிவித்துள்ளது.

டிஜிட்டல் பாரத் நிதி (DBN) பற்றி

- இது தொலைத்தொடர்புச் சட்டம், 2023–ன் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.
- இது இந்திய தந்தி சட்டம், 1885–ன் கீழ் உருவாக்கப்பட்ட உலகளாவிய சேவை கடப்பாட்டு நிதியை (USOF) மாற்றியமைக்கும்.
- USOF என்பது உலகளாவிய அணுகல் வரி மூலம் உருவாக்கப்பட்ட நிதி ஆகும்

## UNESCO உலக பாரம்பரிய பட்டியல்

- சர்வதேச நினைவுச்சின்னங்கள் மற்றும் தளங்கள் சபை (ICOMOS) அசாமின் அஹோம் காலத்து மொய்டாம்களை UNESCO உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்க பரிந்துரைத்துள்ளது.

ICOMOS பற்றி

- உருவாக்கம் – 1965
- இது UNESCO உலக பாரம்பரிய குழுவின் ஆலோசனை அமைப்பாகவும் UNESCO உலக பாரம்பரிய மாநாட்டை செயல்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது .

## காவிரியில் மாசுபாடு அளவு

- காவிரியில் மாசுபாடு அளவை ஆய்வு செய்ய கர்நாடக அரசு நிபுணர் குழுவை அமைத்துள்ளது.
- இந்தக் குழுவிற்கு கர்நாடக மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைமை சுற்றுச்சூழல் அதிகாரியான நிரஞ்சன் தலைமை வகிப்பார்.

## நவி மும்பை விமான நிலையம்

- நவி மும்பையில் புதிய சர்வதேச விமான நிலையம் மார்ச் 2025 முதல் செயல்படும் என்று மத்திய விமானப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் முரளிதர் மொஹோல் தெரிவித்தார்.
- தற்போது கட்டப்பட்டு வரும் விமான நிலையத்திற்கு தினகர் பாலு பாட்டீல் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- இவர் இந்திய விவசாயிகள் மற்றும் தொழிலாளர் கட்சியின் தலைவராக இருந்தார்.

குறிப்பு

- தமிழ்நாட்டில் உள்ள 4 சர்வதேச விமான நிலையங்கள் சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகும்.

## நிதி ஆயோக்கின் மறுசீரமைப்பு

- புதிதாக அமைக்கப்பட்ட மத்திய அரசு நிதி ஆயோக்கை மறுசீரமைத்தது.
- நிதி ஆயோக்கின் பதவிக்காலம், மத்திய அரசின் பதவிக்காலத்துடன் முடிவடைகிறது.
- நிதி ஆயோக் பற்றி
- **உருவாக்கம்** – 2015
- **அமைப்பு**
  - தலைவர் – இந்தியப் பிரதமர்
  - துணைத் தலைவர் – சுமன் பெரி

- ஆட்சி மன்றக் குழு
- பிராந்திய குழு
- CEO – BVR சுப்ரமணியம்

- **இலக்கு**
  - நாட்டில் SDG இலக்குகளை ஏற்றுக்கொள்வதை கண்காணித்தல்
  - மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இடையே போட்டி மற்றும் கூட்டுறவு கூட்டாட்சியை மேம்படுத்துதல்.

## ஆபரேஷன் நன்ஹே ஃபரிஷ்டே

- கடந்த ஏழு ஆண்டுகளில் (2018– மே 2024), ரயில்வே பாதுகாப்புப் படை (RPF) 84,119 குழந்தைகளை **'நன்ஹே ஃபரிஸ்டே'** என்ற மீட்பு நடவடிக்கை மூலம் மீட்டுள்ளது.

**ஆபரேஷன் நன்ஹே ஃபரிஷ்டே பற்றி**

- தொடக்கம் – 2018
- நோக்கம் – இது பல்வேறு இந்திய ரயில்வே மண்டலங்களில் பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளை மீட்பதற்கான ஒரு பணியாகும்

## 6541: 2024 குறியீடு திருத்தம்

- **இந்திய தரநிலைய ஆணையம்** (BIS) சமீபத்தில் IS 6541: 2024 என்ற குறியீட்டை திருத்தியுள்ளது.
- பள்ளிகளில் உணவு/உணவைத் தயாரிப்பதற்குத் தேவையான அடிப்படைத் தரமான சுகாதார நிலையைப் பரிந்துரைக்க 1972 இல் இந்த குறியீடு வெளியிடப்பட்டது.
- இ–கோலி மற்றும் சால்மோனெல்லா உள்ளிட்ட பல்வேறு அளவுருக்களுக்கு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை உணவைப் பரிசோதிக்க இந்தக் குறியீடு பரிந்துரைத்துள்ளது.

**BIS பற்றி**

- உருவாக்கம் – 1986
- **இந்தியத் தரநிலைச் சட்டம், 1986 இன் கீழ்** சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இயக்குனர் – பிரமோத் குமார் திவாரி

## ராஷ்டிரபதி பவனில் உள்ள மண்டபங்களுக்கு சூட்டுதல்

- ராஷ்டிரபதி பவனில் உள்ள இரண்டு முக்கிய மண்டபங்களுக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு புதிய பெயர்களை சூட்டியுள்ளார்.
- தர்பார் ஹால் இனி **கணதந்திர மண்டபம்** என அழைக்கப்படும்.
- அசோக் ஹால் இனி **அசோக் மண்டபம்** என அழைக்கப்படும்.
- தேசிய விருதுகள் வழங்குதல் போன்ற முக்கிய விழாக்கள் மற்றும் கொண்டாட்டங்கள் தர்பார் ஹாலில் நடைபெறும்.
- வெளிநாடுகளின் தூதுவர்கள் தங்கள் சான்றிதழ்களை சமர்ப்பிக்க அசோக் ஹால் பயன்படுத்தப்படுகிறது.

**ராஷ்டிரபதி பவன் பற்றி:**

- திறப்பு – 1931.
- கட்டிடக்கலைஞர்கள்: **எட்வின் லூட்யன்ஸ், ஹெர்பர்ட் பேக்கர்**

## யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியல்

- சமீபத்தில் யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளமாக **இந்தியாவின் 43வது தளமாக சராய்டியோ மொய்தாம்கள்** சேர்க்கப்பட்டது.
- சராய்டியோ மொய்தாம் என்பது அசாமின் அஹோம் வம்சாவளியின் 700 ஆண்டுகள் பழமையான புதைமேடாகும்.
- வடகிழக்கு பிராந்தியத்திலிருந்து பட்டியலில் சேர்க்கப்பட்ட முதல் கலாச்சார தளம் இதுவாகும்.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- இவை **"அசாமின் பிரமிடுகள்"** என்று பிரபலமாக அழைக்கப்படுகின்றன.
- காசிரங்கா மற்றும் மானாஸ் தேசிய பூங்காக்களுக்குப் பிறகு, இது அசாமின் மூன்றாவது உலக பாரம்பரிய தளமாகும்.
- உலக பாரம்பரிய குழு 168 நாடுகளில் 1,199 தளங்களை பட்டியலில் சேர்த்துள்ளது.
- யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளம் பற்றி:
- **இது 1972 ஆம் ஆண்டின் உலக பாரம்பரிய மாநாட்டின் கீழ்** அறிவிக்கப்பட்டது.
- இது உலகின் சிறந்த பாரம்பரிய தளங்களை பாதுகாப்பதற்கான கட்டமைப்பை நிறுவியது.

## GROWTH–இந்தியா தொலைநோக்கி

- சமீபத்தில் GROWTH–**இந்தியா தொலைநோக்கி** பூமியை நெருங்கி வந்த 116 மீட்டர் உயரமுள்ள குறுங்கோள் ஒன்றைப் படம் பிடித்தது.
- இந்த தொலைநோக்கி GROWTH–இந்தியா திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது.
- GROWTH என்பது Global Relay of Observatories Watching Transients Happen (நிகழும் நிலையற்ற நிகழ்வுகளை கவனிக்கும் ஆய்வகங்களின் உலகளாவிய தொடர்) என்பதன் சுருக்கமாகும்.

GROWTH–**இந்தியா தொலைநோக்கி** பற்றி:

- இது இந்தியாவின் முதல் முழு தானியங்கி **ஒளியியல் ஆராய்ச்சி தொலைநோக்கியாகும்**
- நோக்கம் – பூமியை நெருங்கும் குறுங்கோள்கள் உட்பட வெடிக்கும் நிலையற்ற மற்றும் மாறுபடும் மூலங்களை, கண்காணித்தல்.
- இது லடாக்கின் ஹன்லேவில் உள்ள இந்திய வானியல் ஆய்வகத்தில் அமைந்துள்ளது.

## வெளியுறவு ஒத்துழைப்புக்கான செயலாளர்

- கேரள அரசின் வெளியுறவு ஒத்துழைப்புக்கான செயலாளரை நியமிக்கும் உத்தரவை வெளியுறவு அமைச்சகம் விமர்சித்துள்ளது. மாநில அரசுகள் தங்களின் அரசியலமைப்பு அதிகார வரம்பைத் தாண்டிய விவகாரங்களில் தலையிடக்கூடாது என்றும் கூறியுள்ளது.

**வெளியுறவு விவகாரங்கள் குறித்த அரசியலமைப்பு விதிகள்:**

- **ஏழாவது அட்டவணை:** வெளியுறவு விவகாரங்கள் மத்திய பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது.
- **உறுப்பு 253:** வேறு எந்த நாட்டுடனான ஒப்பந்தத்தை அமல்படுத்துவதற்கோ அல்லது சர்வதேச மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவை செயல்படுத்துவதற்கோ சட்டம் இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உண்டு.
- **உறுப்பு 293:** வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதில் மாநிலங்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கிறது.

## பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சாக்ஷரதா அபியான் (PMGDISHA)

- சமீபத்தில், **பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சாக்ஷரதா அபியான்** (PMGDISHA) **திட்டத்தின் கீழ்** 6 கோடிக்கும் மேற்பட்டோர் பயிற்சி பெற்றுள்ளனர் மற்றும் 4.7 கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகள் சான்றிதழ் பெற்றுள்ளனர் என்று மத்திய அரசு பாராளுமன்றத்தில் தெரிவித்தது.

PMGDISHA பற்றி:

- தொடக்கம் – 2017
- **செயல்படுத்தும் நிறுவனம்:** CSC e–Governance Services India Limited.

வெற்றி I.A.S. கல்வி மையம் VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

- **பயனாளிகள்:** ஒவ்வொரு தகுதியான கிராமப்புற குடும்பத்திலிருந்தும் ஒரு நபர் (14–60 வயது).
- நோக்கம் – கிராமப்புறங்களில் 6 கோடி நபர்களை டிஜிட்டல் கல்வியறிவு பெற்றவர்களாக மாற்றுதல்.

## மனாஸ் (MANAS) உதவி எண்

- மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவு அமைச்சர் அமித் ஷா புது டில்லியில் நடைபெற்ற **7வது போதைப்பொருள் ஒருங்கிணைப்பு மைய** (NCORD) உயர்மட்ட கூட்டத்திற்கு தலைமை தாங்கி, தேசிய போதைப்பொருள் தடுப்புக்கான **'மனாஸ்'** (MANAS) – உதவி எண்ணை தொடங்கி வைத்தார்.
- மனாஸில் பின்வருவன அடங்கும்:
  - கட்டணமில்லா உதவி எண் 1933
  - இணையதள போர்ட்டல்
  - மொபைல் செயலி
  - UMANG செயலி

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

# 7 சர்வதேச நிகழ்வு



## ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO)

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) 24வது உச்சிமாநாடு சமீபத்தில் கஜகஸ்தானின் அஸ்தானா நகரத்தில் நடைபெற்றது.

**உச்சிமாநாட்டின் முக்கிய அம்சங்கள்**

- SCO–வின் 10வது உறுப்பு நாடாக பெலாரஸ் இணைந்தது.
- அஸ்தானா பிரகடனத்தை ஏற்றுக்கொள்ளுதல்.
- 2025–2027 ஆண்டுகளுக்கான பயங்கரவாதம், பிரிவினைவாதம் மற்றும் தீவிரவாதத்தை எதிர்க்கும் ஒத்துழைப்புத் திட்டம் ஆகும்
- 2024–2029க்கான போதைப்பொருள் எதிர்ப்பு உத்தி
- 2035 வரையிலான SCO மேம்பாட்டு உத்தி.

SCO பற்றி

- தொடக்கம் – ஜூன் 15, 2001.
- இது சீனாவின் ஷாங்காயில் நிறுவப்பட்ட நிரந்தர அரசுகளுக்கிடையேயான சர்வதேச அமைப்பாகும்.
- இந்தியா உட்பட 9 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.

## ஆசியான் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம்

- வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் சமீபத்தில் **லாவோஸ், கம்போடியாவில்** நடைபெற்ற தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் (ஆசியான்) வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தின் தொடக்க அமர்வில் கலந்து கொண்டார்.
- இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கை மற்றும் இந்தோ–பசிபிக் பார்வையின் "அடிப்படை" என்று அவர் இந்த அமைப்பைக் குறிப்பிட்டார்.
- ஆசியான் மற்றும் கிழக்கு ஆசிய ஒத்துழைப்புக்கான பிரதமர் நரேந்திர மோடியின் **12 அம்ச திட்டத்தையும்** அவர் எடுத்துரைத்தார்.

**ஆசியான் பற்றி:**

- உருவாக்கம் – ஆகஸ்ட் 8, 1967.
- தலைமையகம் – ஜகார்த்தா.
- உறுப்பினர்கள் – 10

**குறிப்பு:**

- கிழக்கு நோக்கிய கொள்கை இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் உள்ள விரிவான அண்டை நாடுகளை மையமாகக் கொண்டது, அதில் ஆசியான் முக்கிய பங்கு வகிக்கிறது.
- 12 அம்ச திட்டம் இந்தியாவுக்கும் ஆசியானுக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

# 8 தமிழ்நாடு



## நான் முதல்வன் திட்டம்

- ஜூன் 18, 2024 நிலவரப்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த 25,888 மாணவர்கள் மாநில அரசின் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.
- இத்திட்டத்தின் கீழ், பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் லாபகரமான வேலைகளைப் பெற அரசு உதவி செய்கிறது.
- இதுவரை 252 கல்லூரிகள் வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்றுள்ளன.

**நான் முதல்வன் திட்டம் பற்றி**

- தொடக்கம் – மார்ச் 2022.
- நோக்கம் – மாநிலம் முழுவதும் ஆண்டுதோறும் சுமார் 10 லட்சம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாடு அளித்தல்.

## முருகேசன் குழு

- நீதிபதி டி. முருகேசன் குழு சமீபத்தில் தமிழக அரசுக்கு தனது அறிக்கையை சமர்ப்பித்தது.
- தனித்துவமான மாநில கல்விக் கொள்கையை வரைவு செய்வதற்காக தமிழக அரசால் இந்தக் குழு அமைக்கப்பட்டது

**.முக்கிய பரிந்துரைகள்**

- உயர்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைக்கு எந்தவிதமான நுழைவுத் தேர்வும் நடத்தக்கூடாது என பரிந்துரைத்துள்ளது.
- உயர்கல்வியின் அனைத்துப் படிப்புகளுக்கும் சேர்க்கைக்கு 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் பெற்ற மொத்த மதிப்பெண்களே அடிப்படையாக இருக்க வேண்டும்.
- அரசியலமைப்பின் 7வது அட்டவணையின் பட்டியல் II (மாநில பட்டியல்) இல் 'கல்வி' என்ற பொருளை மீண்டும் கொண்டு வருவதற்கு தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.
- நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், தன்னாட்சி கல்லூரிகள், முன்மொழியப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் சுயநிதி நிறுவனங்களை கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் உள்ளது.
- பயிற்சி வகுப்புகளுக்குத் தடை விதிக்கவும், கல்வியில் அரசு முதலீட்டை அதிகரிக்கவும் பரிந்துரைத்துள்ளது.

## வயிற்றுப்போக்கை நிறுத்தும் இயக்கம் 2024

- தமிழகம் சமீபத்தில் மாநிலம் முழுவதும் 'வயிற்றுப்போக்கை நிறுத்தும் இயக்கம் 2024' மற்றும் குழந்தைகளுக்கான வைட்டமின் ஏ மருந்து வழங்கும் திட்டத்தைத் தொடங்கியது.
- தமிழ்நாட்டில் கடுமையான வயிற்றுப்போக்கு நோய்களால் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறப்பு இல்லாத நிலையை அடைவதே இந்த பிரச்சாரத்தின் நோக்கமாகும்.
- இந்த பிரச்சாரம் ஜூலை 1 முதல் ஆகஸ்ட் 31 வரை மாநிலத்தில் உள்ள துணை சுகாதார

வெற்றி I.A.S. கல்வி மையம்

நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிகளில் நடைபெறும்.

குறிப்பு

- வைட்டமின் ஏ குறைபாட்டால் ஏற்படும் பார்வையிழப்பில் 7% தமிழகத்தில் ஏற்படுகிறது.

## தமிழ்நாடு விண்வெளி தொழில் கொள்கை 2024

- தமிழக அரசு சமீபத்தில் தமிழ்நாடு விண்வெளி தொழில் கொள்கை 2024 வரைவை வெளியிட்டது.
- இந்தக் கொள்கை 10 ஆண்டுகளில் சுமார் 10,000 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, மேலும் இத்துறையில் உள்ள நிறுவனங்களுக்கு பல ஊக்கத்தொகைகளையும் வழங்குகிறது.
- விண்வெளித் துறை தொடர்பான உற்பத்தி மற்றும் சேவைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் இந்தக் கொள்கை பொருந்தும்.
- விண்வெளிப் பொருளாதாரத்திற்குத் தேவையான சூழல் அமைப்பு – பொது பொறியியல், மின்னணுவியல், இரசாயனம், மனித மூலதனம் ஆகியவற்றுடன் விண்வெளித் துறை குறித்த தொலைநோக்குப் பார்வை – தமிழகத்திற்கு உள்ளதாக இந்தக் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு ஏற்கனவே தனியார் தொழில்துறைகளுடன் இணைந்து திருச்சியில் TREAT என்ற பொதுவான வசதியை நிறுவியுள்ளது, இது விண்வெளித் தொழிற்துறையின் கனரக பொறியியல் தேவைகளை ஆதரிக்கும் திறன் கொண்டது.
- இதேபோன்ற ஒரு வசதி குலசேகரப்பட்டினத்தில் அமையவுள்ள விண்வெளித் துறைமுகத்தின் அருகாமையில் நிறுவப்படும்.

## சோதனை வசதிகள்

- பாதுகாப்பு அமைச்சகம் (MoD) சென்னையில் தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் வழித்தடத்தின் கீழ் மூன்று நவீன சோதனை வசதிகளை நிறுவ புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) செய்துள்ளது – ஆளில்லா விமான அமைப்பு (UAS), மின்னணு போர் (EW) மற்றும் மின்–ஒளியியல் (EO) ஆகிய ஒவ்வொரு துறைகளிலும் அமைக்கப்படும்.
- இந்த வசதிகள் பாதுகாப்பு மற்றும் விமானத் துறைகளுக்கு ஊக்கமளிக்கும் நோக்கம் கொண்டது.

குறிப்பு

- தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் வழித்தடத்தின் (TN–DIC) கீழ் சென்னை, கோயம்புத்தூர், ஒசூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## சுகாதார உள்கட்டமைப்பு

- தமிழக அரசு மாநிலத்தில் சுகாதார உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான நிதி ஆதாரங்கள் மற்றும் செயல் திட்டம் குறித்து உலக வங்கியுடன் கலந்துரையாடியது.
- உலக வங்கியின் ஆதரவுடன் $287 மில்லியன் மதிப்பிலான தமிழ்நாடு சுகாதார அமைப்பு சீர்திருத்தத் திட்டத்தை அரசு ஏற்கனவே செயல்படுத்தியுள்ளது.

**உலக வங்கி பற்றி**

- **உருவாக்கம்** – ஜூலை 1944.
- **தலைமையகம்** – வாஷிங்டன்.
- **தலைவர்** – அஜய் பங்கா

## மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை ஆய்வு செய்ய குழு

- மத்திய அரசால் இயற்றப்பட்ட மூன்று புதிய குற்றவியல் சட்டங்களில் மாநில அளவில் செய்ய

வேண்டிய திருத்தங்களை ஆய்வு செய்து பரிந்துரைக்க தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒரு நபர் குழுவை அமைத்துள்ளார்.

- இந்தி மொழியில் உள்ள சட்டங்களின் பெயர் மாற்றத்தையும் உள்ளடக்கிய திருத்தங்களை ஆய்வு செய்து பரிந்துரைக்க நீதிபதி எம். சத்தியநாராயணன் தலைமையிலான குழு அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு

- பாரதீய நியாய சம்ஹிதா, பாரதீய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா மற்றும் பாரதீய சாக்ஷ்ய சம்ஹிதா ஆகிய புதிய குற்றவியல் சட்டங்கள் ஜூலை 1 முதல் அமலுக்கு வந்தன.
- இந்த புதிய சட்டங்கள் 1860ஆம் ஆண்டின் இந்திய தண்டனைச் சட்டம், 1973ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் 1872ஆம் ஆண்டின் இந்திய சாட்சியச் சட்டம் ஆகியவற்றை மாற்றியமைக்கும் நோக்கம் கொண்டது.

## பருவநிலை மாற்றத்தை ஆய்வு செய்ய குழு

- 'ஒரே சுகாதாரம் மற்றும் பருவநிலை மாற்ற உத்தி குழுவை' அமைக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.
- பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பொது சுகாதார சவால்களுக்கு விரிவான பதிலளிப்பை ஊக்குவிக்க 23 உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இக்குழுவிற்கு தலைமைச் செயலாளர் தலைமை வகிப்பார்.
- சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வனத்துறைகளின் முதன்மைச் செயலாளர் ஒருங்கிணைப்பாளராக இருப்பார்.

## கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம்

- அதிகமான பெண் குடும்பத் தலைவர்களை கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தின் கீழ் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமீபத்தில் தமிழக அரசு தெரிவித்தது.
- இதுவரை சுமார் 1.15 கோடி பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளாக உள்ளனர்.

**கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் பற்றி**

- தொடக்கம் – செப்டம்பர் 15, 2023 காஞ்சிபுரம்
- குறிக்கோள் – தகுதியுள்ள பெண் குடும்பத் தலைவர்களுக்கு மாதத்திற்கு ரூ 1,000 அடிப்படை குறைந்தபட்ச வருமானத்தை உறுதி செய்தல்.
- பயனாளிகள் – **21 வயது நிறைவடைந்த பெண்கள்** (செப்டம்பர் 15, 2002க்கு முன் பிறந்தவர்)

## தமிழ்நாட்டின் மொழி அட்லஸ், 2011

- இந்தியப் பதிவாளர் ஜெனரல் மற்றும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையர் (RG & CCI) **தமிழ்நாட்டின் மொழி அட்லஸ், 2011ஐ** சமீபத்தில் வெளியிட்டார்.
- இந்தியப் பதிவாளர் ஜெனரல் மற்றும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையம் (RG & CCI) **மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ்** செயல்படுகிறது.
- இந்த அட்லஸ் தமிழ்நாட்டிற்கான 2011 **மக்கள்தொகைக் கணக்கெடுப்புத் தரவை** அதன் பகுப்பாய்விற்குப் பயன்படுத்தியுள்ளது.
- 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி **தமிழ்நாட்டின் மக்கள் தொகை 7,21,47,030** ஆகும்.
- தமிழ்நாட்டின் மொழி அட்லஸ், 2011, மாநில வாரியான இரண்டாவது மொழி அட்லஸ் ஆகும்.

**முக்கிய கண்டுபிடிப்புகள்**

- தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் சுமார் **18.49% பேர் ஆங்கிலம்** பேசக்கூடியவர்கள்.
- மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 2.11% பேர் இந்தி பேசக்கூடியவர்கள்.

வெற்றி I.A.S. கல்வி மையம் Since 2011

- மாநிலத்தில் உள்ள மொத்த மொழி பேசுபவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வகைப் படுத்தப்பட்ட ஐந்து முக்கிய மொழிகள் – **தமிழ்** (6,37,53,997), **தெலுங்கு** (42,34,302), **கன்னடம்** (12,86,175), **உருது** (12,64,537), மற்றும் **மலையாளம்** (7,26,096).

குறிப்பு

- இந்தியாவின் மொழி அட்லஸின் முதல் பதிப்பு **2004 இல் 1991 மக்கள்தொகைக் கணக்கெடுப்புத் தரவைப்** பயன்படுத்தி வெளியிடப்பட்டது.
- அக்டோபர் 2023 இல் முதல் மாநில வாரியான மொழி அட்லஸ் வெளியிட்ட மாநில **மேற்குவங்கமாகும்.**

## முதலமைச்சரின் காலை உணவு திட்டம்

- அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதல்வரின் காலை உணவு திட்டத்தை விரிவுபடுத்தும் திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் **திருவள்ளூர் மாவட்டத்தில்** தொடங்கி வைத்தார்.
- இந்நிகழ்வு முன்னாள் முதல்வர் **கே.காமராஜரின் பிறந்தநாளில் தொடங்கப்பட்டது.**
- இத்திட்டத்தின் மூலம் **3,995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் 2,23,536 மாணவர்கள் பயனடைவார்கள்.**

**முதலமைச்சரின் காலை உணவு திட்டம்** பற்றி

- **தொடக்கம் – செப்டம்பர் 15, 2022**
- குறிக்கோள் – அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் **1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கு** காலை உணவு வழங்குதல்.

## சென்னை உயர்நீதிமன்றத்தின் தற்காலிக தலைமை நீதிபதி

- **நீதிபதி டி.கிருஷ்ணகுமார்** சமீபத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தின் தற்காலிக தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தற்காலிக தலைமை நீதிபதிகள் நியமனம் **அரசியலமைப்பின் 223 வது பிரிவின் கீழ்** ஜனாதிபதியால் செய்யப்பட வேண்டும்.

**சென்னை உயர்நீதிமன்றம்** பற்றி

- **உருவாக்கம்** : ஜூன் 26, 1862
- **அதிகார வரம்பு** : தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி.

## வாழும் கைவினை பொக்கிஷம் விருது

- 2022–23ஆம் ஆண்டுக்கான **வாழும் கைவினை பொக்கிஷம் விருதை** எட்டு கைவினைஞர்களுக்கும், 2022–23 ஆம் ஆண்டுக்கான **பூம்புகார் மாநில விருதை** 10 கைவினைஞர்களுக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.
- இந்த விருதுகள் அந்தந்த துறைகளில் சிறந்து விளங்கும் கைவினைஞர்களுக்கு வழங்கப்படுகின்றன.
- வாழும் கைவினை பொக்கிஷம் விருது ₹1 லட்சத்திற்கான காசோலை, ஒரு தாமிரபத்திரம், எட்டு கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- பூம்புகார் மாநில விருது ₹50,000 ரொக்கப் பரிசு, நான்கு கிராம் தங்கப் பதக்கம், ஒரு தாமிரபத்திரம் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

## 2023–24ம் ஆண்டுக்கான SDG இந்தியா குறியீட்டில் தமிழ்நாட்டின் நிலை

- சமீபத்திய 2023–24ம் ஆண்டிற்கான SDG இந்தியா குறியீட்டின்படி தமிழ்நாடு 78 **மதிப்பெண்ணுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தது,** இது தேசிய சராசரியான 71 ஐ விட அதிகம்.
- இது **நிதி ஆயோக்** மூலம் வெளியிடப்பட்டது.

- இது 70 இலக்குகள் மற்றும் 113 குறிகாட்டிகளில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் (UTs) தேசிய முன்னேற்றத்தை அளவிடுகிறது மற்றும் கண்காணிக்கிறது.
- மதிப்பெண்கள் 0–100 வரை இருக்கும்.
- மாநிலங்கள் குறியீட்டின் கீழ் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன: **சாதனையாளர் மாநிலம் (100), முன்னணி மாநிலம் (65–99), செயல்திறன்மிக்க மாநிலம் (50–64), மற்றும் ஆர்வமுள்ள மாநிலம்** (0–49).

**தமிழகத்தின் செயல்திறன்**

- தமிழ்நாடு ஒரு முன்னணி மாநிலம் என்ற இடத்தையும் தக்க வைத்துக் கொண்டது.
- சமீபத்திய அறிக்கையில் 13 SDG **இலக்குகளில் தமிழ்நாடு 'முன்னணியில்' உள்ளது.**
- மலிவு மற்றும் தூய்மையான ஆற்றலில் சாதனையாளர் பிரிவு (SDG – 7)
- பாலின சமத்துவம் (SDG – 5) மற்றும் நீருக்கடியில் வாழ்க்கை (SDG – 14) ஆகியவற்றில் செயல்திறன் மிக்க மாநிலம்.

## புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டம் (புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022–27)

- பள்ளிக் கல்வித் துறை, தமிழ்நாடு முழுவதும் 15 **வயதுக்கு மேற்பட்ட,** ஆறு லட்சத்துக்கும் அதிகமான படிப்பறிவில்லாதவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு அடிப்படை கல்வியறிவு வழங்குவதற்கான வகுப்புகளைத் தொடங்கியுள்ளது.
- எழுத்தறிவுத் திட்டத்தில் அதிக சேர்க்கை விகிதம் கொண்ட முதல் ஐந்து மாவட்டங்கள்
  - கிருஷ்ணகிரி – 61,622
  - சேலம் – 50,671
  - திருவண்ணாமலை – 37,971
  - மதுரை – 28,472
  - ஈரோடு – 26,020
- இந்த திட்டத்தின் மூலம் மாநிலம் முழுவதும் 30 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டம் பற்றி**

- **தொடக்கம்** – 2022–23 முதல் 2026–27 வரை
- **நோக்கம்** – 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய 5.00 கோடி எழுத்தறிவு இல்லாதவர்களை எழுத்தறிவு உள்ளவர்களாக மாற்றுதல்
- **ஐந்து நோக்கங்கள்:**
  - அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணியல்
  - சிக்கலான வாழ்க்கைத் திறன்கள்
  - தொழில் திறன் மேம்பாடு
  - அடிப்படைக்கல்வி
  - தொடர்ச்சியான கல்வி.

## மனநலம் பாதிக்கப்பட்ட வீடற்ற நபர்களுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை

- மனநலம் பாதிக்கப்பட்ட வீடற்றவர்களை மீட்பது மற்றும் மறுவாழ்வு அளிப்பதில் ஈடுபடும் செயல்முறைகளை முறைப்படுத்த தமிழக அரசு ஒரு கொள்கையை வகுத்து வருகிறது.
- அவர்கள் குடும்பத்துடன் மீண்டும் இணைவதற்கும் சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைவதற்கும் இந்தக் கொள்கை உதவும்.
- ஆதரவற்று திரியும் மனநோயாளிகளுக்கு இந்தக் கொள்கை கட்டமைக்கப்பட்ட சேவைகளை வழங்கும்.
- இது பல்வேறு பங்குதாரர்களின் பங்குகள் மற்றும் பொறுப்புகளை வரையறுக்கிறது.

வெற்றி I.A.S. கல்வி மையம் VETRII I.A.S. STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

## மக்களுடன் முதல்வர் திட்டம்

- **முதல்வரின் முகவரித் துறையின் சிறப்பு அதிகாரியாக ஐஏஎஸ் அதிகாரி பி.அமுதா** சமீபத்தில் நியமிக்கப்பட்டார்.
- மக்களுடன் முதல்வர் மற்றும் பிற மக்கள் குறை தீர்க்கும் திட்டங்களை இத்துறை கவனித்து வருகிறது.

குறிப்பு

- ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் உள்ளடக்கிய **பொதுக் குறைகள் முதல்வரின் உதவி மேலாண்மை அமைப்பு (CM ஹெல்ப்லைன்)** என்பது குடிமக்கள் தங்கள் குறைகளைத் தாக்கல் செய்ய இரு வழி தொடர்பு தளமாகும்.
- இது தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் (TNe-GA) உருவாக்கப்பட்டது.
- **முதல்வரின் உதவி எண் – 1100.**

## 950 புதிய வகுப்பறைகள் திறப்பு

- 264.15 கோடி மதிப்பீட்டில மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் **956 பள்ளி வகுப்பறைகள், 12 அறிவியல் ஆய்வகங்கள்** மற்றும் பள்ளிக் கல்வித்துறைக்கான புதிய கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- 26 மாவட்டங்களில் உள்ள 106 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 515 வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.
- 25 மாவட்டங்களில் அரசு நடத்தும் 176 தொடக்கப் பள்ளிகளில் 441 வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

## பரந்தூர் விமான நிலையம்

- சென்னையின் இரண்டாவது விமான நிலையத்தை கட்டுவதற்காக பரந்தூர் தளத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- பசுமை விமான நிலையத்திற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) விண்ணப்பித்ததைத் தொடர்ந்து, பசுமை விமான நிலையங்களுக்கான வழிகாட்டுதல் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- TIDCO தயாரித்த திட்டத்தின்படி, பசுமை விமான நிலையம் ₹32,704 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு நான்கு கட்டங்களாக கட்டப்படும்.

TIDCO பற்றி

- உருவாக்கம் – 1965
- ஒரு முதன்மையான தொழில்துறை மேம்பாட்டு நிறுவனமாகும்
- நோக்கம் – தமிழ்நாட்டில் பெரிய தொழில்துறை மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களில் முதலீட்டை எளிதாக்குதல்

## கட்டட அனுமதிக்காக ஒற்றைச் சாளர அமைப்பு உருவாக்கம்

- சுய சான்றிதழின் அடிப்படையில் கட்டிட அனுமதி பெறக்கூடிய ஒற்றைச் சாளர அமைப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- இதற்கான ஒப்புதலைப் பெற,
- 2,500 சதுர அடி வரையிலான மனை.அளவு மற்றும் 3,500 சதுர அடி வரை கட்டப்பட்ட பகுதியாக இருக்க வேண்டும்.
- தரை அல்லது தரை மற்றும் ஒரு தளம் கொண்ட குடியிருப்பு கட்டமைப்புகளை கட்டுமான அனுமதியின்றி உடனடியாக பதிவுசெய்ய தகுதியுடையது.

## மாநில அரசின் கோரிக்கைகள்

- தமிழகத்திற்கான பல்வேறு ரயில்வே மற்றும் சாலைத் திட்டங்களை மாநில கோரிக்கைகளாக முதல்வர் மு.க. ஸ்டாலின் பட்டியலிட்டார்.
- அரசின் முக்கிய கோரிக்கைகளாவன
  - மூன்று ஆண்டுகளாக நிலுவையில் உள்ள சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு.

- தாம்பரம் மற்றும் செங்கல்பட்டு இடையே பறக்கும் நெடுஞ்சாலை திட்டத்திற்கு ஒப்புதல்
- நடுத்தர குடும்பங்களின் வருமான வரிச்சுமை குறைப்பு.
- கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒப்புதல்
- தமிழகத்தில் அறிவிக்கப்பட்டுள்ள ரயில்வே திட்டங்களை விரைவுபடுத்துதல்
- கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான செலவின வரம்பை அதிகரித்தல்.

## TNUHDB, TNHBஆல் கட்டப்பட்ட புதிய வீடுகள் திறப்பு

- தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் (TNUHDB) கட்டப்பட்ட 4,100 வீடுகளையும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் (TNHB) கட்டப்பட்டுள்ள 1,400 வீடுகளையும் மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

TNUHDB பற்றி

- உருவாக்கம் – 1970
- இது தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் சட்டம் 1971 மூலம் உருவாக்கப்பட்டது.
- இது முன்பு தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் என்று அழைக்கப்பட்டது.
- நோக்கம் – தமிழகத்தில் குடிசைகளை ஒழித்து சுகாதாரமான குடியிருப்புகளை வழங்குதல்.

TNHB பற்றி

- தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டம், 1961ன் கீழ் உருவாக்கப்பட்டது

## தமிழ்ப் புதல்வன் திட்டம்

- தமிழ்நாடு அரசு சமீபத்தில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் நோக்கத்தை விரிவுபடுத்தி, அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் படித்த மாணவர்களையும் உள்ளடக்கியுள்ளது.
- 2024–25ல் சுமார் 3.28 லட்சம் மாணவர்கள் இத்திட்டத்தால் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்ப் புதல்வன் திட்டம் பற்றி:**

- நோக்கம் – பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களிடையே உயர்கல்வியை ஊக்குவித்தல்.
- பலன் – **அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை** படித்து உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு **மாதம் ₹1,000** நிதி உதவி வழங்கப்படும்.

## ஐக்கிய அரபு அமீரக பொருளாதார அமைச்சர் தமிழ்நாடு வருகை

- ஐக்கிய அரபு அமீரக பொருளாதார அமைச்சர் **அப்துல்லா பின் தௌக் அல் மர்ரி**, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.
- தமிழ்நாட்டில் செய்யப்படவுள்ள முதலீடுகள் குறித்த திட்டங்கள் பற்றி அவர்கள் விவாதித்தனர்.

**ஐக்கிய அரபு அமீரகம் பற்றி:**

- தலைநகரம் – அபுதாபி
- நாணயம் – ஐக்கிய அரபு அமீரக திர்ஹாம்
- பிரதமர் – முகமது பின் ரஷீத் அல் மக்தூம்
- அதிபர் – முகமது பின் சயீத் அல் நஹ்யான்

## பருவநிலை மாற்றத்தை ஆய்வு செய்ய குழு

- **'ஒரே சுகாதாரம் மற்றும் பருவநிலை மாற்ற உத்தி குழுவை'** அமைக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.
- பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பொது சுகாதார சவால்களுக்கு விரிவான
- பதிலளிப்பை ஊக்குவிக்க **23 உறுப்பினர்கள் கொண்ட குழு** அமைக்கப்பட்டுள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம் Since 2010

- இக்குழுவிற்கு தலைமைச் செயலாளர் தலைமை வகிப்பார்.
- சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வனத்துறைகளின் **முதன்மைச் செயலாளர்** ஒருங்கிணைப்பாளராக இருப்பார்
- இது குடிமக்களுக்கு போதைப்பொருள் கட்டுப்பாட்டு அமைப்பு (NCB)–உடன் 24x7 தொளுடர்பு கொண்டு போதை மறுவாழ்வு குறித்த ஆலோசனை பெறவும், போதைப்பொருள் கடத்தல் குறித்த தகவல்களை பகிரவும் உதவும்.

குறிப்பு

- UMANG – மத்திய மற்றும் மாநில அரசு சேவைகளை அணுக உதவும் மொபைல் செயலி ஆகும்.

## தமிழகத்தின் மகப்பேறு இறப்பு விகிதம் குறைந்துள்ளது

- சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பின் (HMIS) தரவுகளின்படி, 2023–24ல் தமிழகத்தின் மகப்பேறு இறப்பு விகிதம் (MMR) ஒரு லட்சம் உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு 45.5 என குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- உலகளாவிய மகப்பேறு இறப்பு விகிதத்தை ஒரு லட்சம் உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு **70க்கும் குறைவாக குறைக்க வேண்டும் என்ற நிலையான வளர்ச்சி இலக்குகளை** (SDG) தமிழகம் அடைந்துள்ளது.
- 2023 ஏப்ரல் முதல் 2024 மார்ச் வரை **விருதுநகரில்** மகப்பேறு இறப்புகள் ஏதும் பதிவாகவில்லை.
- மகப்பேறு இறப்புகளுக்கான காரணங்களில் **60% முதல் 75% வரை நான்கு அபாய காரணிகளுடன் தொடர்புடையவை:**
  - கர்ப்பகால உயர் இரத்த அழுத்தம்
  - பிரசவத்திற்குப் பின் ஏற்படும் இரத்தப்போக்கு
  - செப்சிஸ் (இரத்த நச்சு)
  - குடும்பக் கட்டுப்பாட்டு சேவைகள் இன்மை.

## TN–RISE முன்முயற்சி

- **தமிழ்நாடு தொழிற்காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்க மையம்** (TN–RISE) எனும் முன்முயற்சியின் கீழ், தமிழகம் முழுவதிலும் உள்ள சுமார் 130 நிறுவனங்கள் மற்றும் ஸ்டார்ட் அப்கள் பெண் தொழில்முனைவோர்களால் வழிநடத்தப்படும்.

TN–RISE பற்றி

- இது தமிழ்நாடு ஊரக மாற்றத் திட்டத்தின் (TNRTP) கீழ் ஒரு சிறப்பு திட்ட வாகனமாக செயல்படுகிறது.
- நோக்கம் – கிராமப்புற பெண் தொழில் முனைவோர் அரசு மற்றும் அதன் திட்டங்களை அணுகுதல்
- TN–Rise முன்முயற்சியின் கீழ் **பெண்கள் ஸ்டார்ட் அப் கவுன்சில்** உருவாக்கப்பட்டது.
  - **நோக்கம்**–கடன் மற்றும் சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை அணுகுவதில் பெண் தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ளுதல்

வெற்றி I.A.S. கல்வி மையம்

# மத்திய பட்ஜெட் 2024

**நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஒன்றிய பட்ஜெட் 2024ஐ தாக்கல் செய்தார்.**

- இது அவர் தாக்கல் செய்த 7வது ஒன்றிய பட்ஜெட் ஆகும்.
- மோடி 3.0 அரசாங்கத்தின் கீழான முதல் பட்ஜெட்டில் நான்கு கவனம் செலுத்தும் முக்கிய பகுதிகள்
  - கரிப் (ஏழைகள்)
  - யுவா (இளைஞர்கள்),
  - அன்னதாதா(விவசாயிகள்)
  - நாரி (பெண்கள்)

## 9 முன்னுரிமைப் பகுதிகள்:

- விவசாயத்தில் உற்பத்தித்திறன் மற்றும் மீள்தன்மை
- வேலைவாய்ப்பு மற்றும் திறன்மேம்பாடு .
- சமூக நீதி
- உற்பத்தி மற்றும் சேவைகள்
- நகர்ப்புற வளர்ச்சி
- எரிசக்தி பாதுகாப்பு
- உள்கட்டமைப்பு மேம்பாடு
- புதுமையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு
- அடுத்த தலைமுறை சீர்திருத்தங்கள்

## வேளாண்மை

- **நிதி ஒதுக்கீடு:** 2023–24 மத்திய பட்ஜெட்டில் விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளுக்கு 1.52 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டது.
- **புதியரக பயிர்கள் அறிமுகம்:** 32 வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் 109 புதிய அதிக மகசூல் மற்றும் காலநிலையை தாங்கும் பயிர் ரகங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.
- **இயற்கை கட்டமைப்பு:** அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாடு முழுவதும் 1 கோடி விவசாயிகள் இயற்கை விவசாயத்தில் ஈடுபடுத்தப்படுவார்கள்.
- தேவை அடிப்படையிலான 10,000 உயிரி இடுபொருள் மையங்கள் நிறுவப்படும்.
- **விவசாயத்திற்கான டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு** (DPI) மாநிலங்களுடன் இணைந்து அரசாங்கம் மூன்று ஆண்டுகளில் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பை செயல்படுத்த உதவும்.
- **ஐந்து மாநிலங்களில் ஜன் சமர்த்** அடிப்படையிலான **கிசான் கடன்** அட்டைகளை அரசாங்கம் செயல்படுத்தும்.

## வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு

- **நிதி ஒதுக்கீடு:** கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுத்துறைக்கு ரூ.1.48 லட்சம் கோடியை அரசு ஒதுக்கியுள்ளது.
- **ஐந்து திட்டங்கள்:** ரூ. 2 லட்சம் கோடி செலவில் 4.1 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பயன் அளிக்கும் வகையில் இது தொடங்கப்படும்.
- மூன்று புதிய ஊழியர்–இணைக்கப்பட்ட ஊக்கத் திட்டங்கள் தொடங்கப்படும்:
  - **முதல் திட்டமானது** 210 லட்சம் இளைஞர்கள் பயன்பெறும் வகையில், முதல்முறையாக வருபவர்களுக்கு ஒரு மாத சம்பளத்தை நேரடிப் பலன்களாக மாற்றுவதை ஆதரிக்கும்.
  - **இரண்டாவது திட்டமானது** வேலைவாய்ப்பில் நுழையும் 30 லட்சம் இளைஞர்கள் மற்றும் அவர்களது முதலாளிகள் பயனடையும் வகையில், உற்பத்தித் துறையில் வேலைகளை உருவாக்குவது தொடர்பான திட்டம் .
  - **மூன்றாவது திட்டம்** அனைத்துத் துறைகளிலும் கூடுதல் பணியாளர்களை உள்ளடக்கிய முதலாளிகளை மையமாகக் கொண்ட திட்டமாகும்.
- ஐந்தாண்டுகளில் 20 லட்சம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாடு அளிக்க புதிய மத்திய நிதியுதவி திட்டம் தொடங்கப்படும்.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

## கல்வி

- உள்நாட்டு கல்வி நிறுவனங்களில் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு RS 10 லட்சம் கல்விக் கடன் வழங்கப்படும்.
- இதற்கான மின் வவுச்சர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சம் மாணவர்களுக்கு நேரடியாக வழங்கப்படும்.
- **ஆயிரம் தொழில் பயிற்சி நிறுவனங்கள்** மேம்படுத்தப்படும், மேலும் மாதிரி திறன் கடன் திட்டம் திருத்தப்பட்டு ரூ. 7.5 லட்சம் வரை வழங்கப்படும் .

## பெண்கள்

- பெண்கள் மற்றும் சிறுமிகள் பயன்பெறும் திட்டங்களுக்காக ரூ.3 லட்சம் கோடிக்கு மேல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது .
- பணியிடத்தில் பெண்களின் அதிக பங்களிப்பை எளிதாக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
- பணிபுரியும் பெண்கள் தங்கும் விடுதிகள் மற்றும் குழந்தைகள் காப்பக வசதிகளை ஏற்படுத்துதல்
- பெண்கள் மற்றும் சிறுமிகள் பயன்பெறும் திட்டங்களுக்காக ரூ.3 லட்சம் கோடிக்கு மேல் ஒதுக்கீடு.
- பணியிடத்தில் பெண்களின் அதிக பங்களிப்பை எளிதாக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
- பணிபுரியும் பெண்கள் தங்கும் விடுதிகள் மற்றும் குழந்தைகள் காப்பக வசதிகளை ஏற்படுத்துதல்
- பெண்கள் சார்ந்த திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்
- பெண்கள் தலைமையிலான சுய உதவிக் குழுக்களுக்கு சந்தை அணுகலை ஊக்குவித்தல்.
- பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- பெண்கள் வாங்கும் சொத்துக்களுக்கு முத்திரைக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

# மனித வள மேம்பாடு மற்றும் சமூக நீதி

## பூர்வோதயா

- பீகார், ஜார்கண்ட், மேற்கு வங்காளம், ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றை உள்ளடக்கிய நாட்டின் கிழக்குப் பகுதியின் அனைத்து சுற்று வளர்ச்சிக்கான திட்டம்.
- இது மனித வள மேம்பாடு, உள்கட்டமைப்பு மற்றும் விக்சித் பாரதத்தை அடைய இந்தப் பிராந்தியங்களில் பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

## அமிர்தசரஸ் கொல்கத்தா தொழில்துறை வழித்தடம்

- கயாவில் தொழில்துறை வளர்ச்சியை ஆதரிப்பதற்கு, சாலை இணைப்புத் திட்டங்களின் மேம்பாடு
- பாட்னா–பூர்னியா விரைவுச்சாலை
- பக்சர்– பாகல்பூர் விரைவுச்சாலை
- போத்கயா, ராஜ்கிர், வைஷாலி மற்றும் தர்பங்கா ஸ்பர்ஸ்
- 26,000 கோடி செலவில் பக்சரில் கங்கை நதியின் மீது கூடுதல் 2 வழி பாலம்.
- **பிரதான் மந்திரி ஜன்ஜாதியா உன்னத் கிராம் அபியான்:** பழங்குடியினர் பெரும்பான்மையாக உள்ள கிராமங்கள் மற்றும் ஆர்வமுள்ள மாவட்டங்களில் உள்ள பழங்குடியின குடும்பங்களுக்கு செறிவூட்டல் உள்ளடக்கத்தை வழங்கத் தொடங்கப்பட்டது, இது 63,000 கிராமங்களை உள்ளடக்கியது மேலும் 5 கோடி பழங்குடியின மக்கள் பயனடைவார்கள்.
- **வடகிழக்கு மண்டலம்:** வடகிழக்கு மண்டலத்தில் உள்ள இந்திய அஞ்சல் கட்டண வங்கியின் 100க்கும் மேற்பட்ட கிளைகளை ஏற்படுத்தல்

வெற்றி I.A.S. கல்வி மையம்

## MSMEகளுக்கான உற்பத்தி மற்றும் சேவைகள்

- இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்கு உற்பத்தித் துறையில் MSMEகளுக்கான கடன் உத்தரவாதத் திட்டம் தொடங்கப்படும்.
- ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் வழங்க தனித்தனியாக அமைக்கப்பட்ட சுயநிதி உத்தரவாத நிதி, 100 கோடி வரை உத்தரவாதம்.
- இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI) 3 ஆண்டுகளுக்குள் அனைத்து முக்கிய MSME கிளஸ்டர்களுக்கும் சேவை செய்ய அதன் வரம்பை விரிவுபடுத்த புதிய கிளைகளைத் திறக்கும் மேலும் அவர்களுக்கு நேரடி கடன் வழங்கும்.
- உற்பத்தி மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்காக திட்டங்கள்

## பயிற்சிக்கான திட்டம்:

- 5 ஆண்டுகளில் 1 கோடி இளைஞர்களுக்கு 500 முன்னணி நிறுவனங்களில் இன்டர்ன்ஷிப் வாய்ப்புகளை வழங்கும் திட்டத்தை அரசு தொடங்கும்.
- வேலைவாய்ப்பு உதவித் தொகையாக மாதம் ₹5,000 மற்றும் ஒருமுறை உதவியாக ₹6,000/– வழங்கப்படும்.
- 100 நகரங்களில் தொழில் பூங்காக்கள் அமைக்கப்படும்.
- முக்கிய கனிமங்கள் இயக்கம் : உள்நாட்டு உற்பத்தி, முக்கியமான கனிமங்களை மறுசுழற்சி செய்தல் மற்றும் முக்கியமான கனிம சொத்துக்களை வெளிநாட்டு கையகப்படுத்துதல் ஆகியவற்றிற்காக தொடங்கப்படும்.

## நகர்ப்புற வளர்ச்சி

- **PM–ஆவாஸ் யோஜனா (நகர்ப்புறம்) 2.0:** 1 கோடி நகர்ப்புற ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தொடங்கப்படும்.
- **நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்:** 100 முக்கிய நகரங்களில் நீர் வழங்கல், கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டங்கள் மற்றும் சேவைகள் மாநில அரசுகள் மற்றும் பலதரப்பு வளர்ச்சி வங்கிகளுடன் இணைந்து மேம்படுத்தப்படும்.
- **தெருவோர சந்தைகள்:** பிரதமர் ஸ்வாநிதி திட்டத்தின் கீழ் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு 100 வாராந்திர ஹாட்கள் அல்லது தெருவோர உணவு மையங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

## எரிசக்தி பாதுகாப்பு

- **அணு ஆற்றல்:**
  - சிறிய மற்றும் மாடுலர் அணு உலைகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு
  - தனியார் துறையுடன் இணைந்து செயல்படுத்தும்

  i. பாரத் சிறிய அணு உலைகளை அமைத்தல்

  ii. பாரத் சிறிய மாடுலர் ரியாக்டரின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

  iii. அணுசக்திக்கான புதிய தொழில்நுட்பங்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு.
- குறிப்பு: சர்வதேச அணுசக்தி முகமையின் (IAEA) கூற்றுப்படி, SMRகள் 30 MWe க்கும் குறைவான MWe முதல் 300+ MWe வரையிலான மின் உற்பத்தி திறன் கொண்ட மேம்பட்ட அணு உலைகள் ஆகும்.
- **பிரதமர் சூர்யா கர் முஃப்ட் பிஜிலி யோஜனா:** 1 கோடி குடும்பங்கள் மாதத்திற்கு 300 யூனிட் வரை இலவச மின்சாரம் பெறுவதற்கு உதவும் வகையில் கூரை சூரிய மின்சக்தி ஆலைகளை நிறுவ தொடங்கப்பட்டது.
- மேம்பட்ட அல்ட்ரா சூப்பர் கிரிட்டிகல் வெப்ப மின் நிலையங்கள்:
- 800 மெகாவாட் வணிக ஆலையை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட NTPC மற்றும் BHEL ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக ஒரு உள்நாட்டு தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

## உள்கட்டமைப்பு

- **நிதி ஒதுக்கீடு:** நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.4 சதவீதமாக இருக்கும் மூலதனச் செலவினங்களுக்காக அரசாங்கம் 11,111 கோடியை ஒதுக்கியுள்ளது.
- **பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா (PMGSY):** 25,000 கிராமப்புற குடியிருப்புகளுக்கு அனைத்து வானிலை இணைப்புகளையும் வழங்க PMGSY இன் நான்காம் கட்டம் தொடங்கப்படும்.
- **நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு:** துரிதப்படுத்தப்பட்ட நீர்ப்பாசனப் பயன் திட்டம் மற்றும் பிற ஆதாரங்கள் மூலம் அரசாங்கம் மாநிலங்களுக்கு இடையேயான கோசி–மெச்சி இணைப்பு மற்றும் 20 நடப்பு மற்றும் புதிய திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கும்.

## சுற்றுலா:

- காசி விஸ்வநாதர் கோயில் வழித்தடத்தை மாதிரியாகக்கொண்டு கயாவில் உள்ள விஷ்ணுபாத் கோயிலிலும், பீகாரில் உள்ள போத்கயாவில் உள்ள மகாபோதி கோயிலிலும் வழித்தடம் உருவாக்கப்படும்.
- ராஜ்கிர் (பீகார்) மற்றும் நாளந்தா (பீகார்) ஆகியவற்றுக்கான விரிவான வளர்ச்சி உத்திகள் உருவாக்கப்படும்.
- ஒடிசாவின் முக்கிய இடங்களின் வளர்ச்சிக்கு உதவி வழங்கப்படும்.

## கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி & மேம்பாடு

- **அடிப்படை ஆராய்ச்சி மற்றும் முன்மாதிரி:** அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி நிதியானது அடிப்படை ஆராய்ச்சி மற்றும் முன்மாதிரி மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும்.
- **விண்வெளி பொருளாதாரம்** அடுத்த 10 ஆண்டுகளில் 5 மடங்கு விரிவாக்கப்படும்.

## அடுத்த தலைமுறை சீர்திருத்தங்கள்

- கிராமப்புற மற்றும் நகர்ப்புற நிலம் தொடர்பான சீர்திருத்தங்கள்:
- அனைத்து நிலங்களுக்கும் தனித்துவமான நிலப் பயன்பாட்டு அடையாள எண் (ULPIN) அல்லது பு–ஆதார் ஒதுக்கீடு செய்யப்படும்.
- **தொழிலாளர் தொடர்பான சீர்திருத்தங்கள்:**
    - விரிவான ஒருங்கிணைந்த இ–ஷ்ரம் போர்ட்டல் மற்ற இணையதளங்களுடன் இணைந்து ஒற்றை –நிறுத்தத் தீர்வாக செயல்படும்.
    - ஷ்ரம் சுவிதா மற்றும் சமாதான் இணையதளங்கள் தொழில் மற்றும் வர்த்தகத்திற்கான இணக்கத்தை எளிதாக்கும் வகையில் புதுப்பிக்கப்படும்.
- **காலநிலை நிதிக்கான வகைபிரித்தல்:**
    - காலநிலைத் தழுவல் மற்றும் தணிப்புக்கான மூலதனத்தின் கிடைக்கும் தன்மையை அதிகரிக்க, காலநிலை நிதிக்காக இது உருவாக்கப்படும்.
- **NPS வாத்சல்யா:**
    - சிறார்களுக்கான பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களின் பங்களிப்புகளுக்கான திட்டம் தொடங்கப்படும்.
    - பருவ வயதை அடைந்தவுடன், திட்டத்தை தடையின்றி சாதாரண NPS கணக்காக மாற்றலாம்.
- **எளிதாக தொழில் தொடங்குதல்**
    - தொழில் தொடங்குவதை எளிதாக்குவதற்காக ஜன் விஸ்வாஸ் மசோதா 2.0 அறிமுகப்படுத்தப்படும்.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S. STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
Since 2011

## வரி தொடர்பான திட்டங்கள்

- **புதிய வரி முறையை எளிமையாக்குதல்**

| மொத்த வருமானம் | (ரூ) விகிதம் |
|---|---|
| 3,00,000 வரி இல்லை | வரி இல்லை |
| 3,00,001 முதல் 6,00,000 வரை | 5% |
| 6,00,001 முதல் 9,00,000 | 10% |
| 9,00,001 முதல் 12,00,000 | 15% |
| 12,00,001 முதல் 15,00,000 | 20% வரை |
| 15,00,000 | 30% க்கு மேல் |

- **வருமான வரிச் சட்டம், 1961 இன் விரிவான ஆய்வு:**
  - சட்டத்தை சுருக்கமாகவும், தெளிவாகவும், படிக்கவும் புரிந்துகொள்ளவும் எளிதாக்க விரிவான ஆய்வு செய்யப்படும்.
  - இது தகராறுகள் மற்றும் வழக்குகளைக் குறைத்து, வரி செலுத்துவோருக்கு வரி உறுதியை வழங்கும்.
- **ஏஞ்சல் வரி ஒழிப்பு:** ஸ்டார்ட்அப்களை ஊக்குவிக்க முதலீட்டாளர்கள் மீதான ஏஞ்சல் வரி ரத்து செய்யப்பட்டது.
- **விவாட் சே விஸ்வாஸ் திட்டம் 2024:** மேல்முறையீட்டில் நிலுவையில் உள்ள சில வருமான வரி தகராறுகளைத் தீர்ப்பதற்காக தொடங்கப்படும்.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்